நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper | பக்கங்கள் 06 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 17 | [30-05-93] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 101

## பாடசாலை பைகளைத் தூக்கியதில் மாணவர்களுக்கு முதுகுநோய்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் மாணவர்கள் பாரம்கொண்ட பாடசாலை பைகளை முதுகில் சுமப்பதால் மாணவர்களின் முதுகில் நோய் ஏற்படுவதாக அங்கு மேற்கொண்ட வைத்திய ஆய்வு ஒன்று கூறுகின்றது. பத்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்களே இதனால் பாதிப்படைந்துள்ளனர். 'ஸ்கோலியோஸ்' என்று இந்நோய்க்கு பெயரிடப்பட்டுள்ளது. பாடசாலை வைத்தியசேவை மூலமாக சிங்கப்பூர் பாடசாலைச் சிறுவர்கள் அனைவரும் இந்நோய் தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. சத்திரசிகிச்சை முடிந்து மூன்று வாரகாலத்தில் மாணவன் பாடசாலை செல்ல முடியும். சிகிச்சையின்போது முதுகெலும்பு மீதான புதிய சிகிச்சை முறையை இரு பிரெஞ் நிபுணர்கள் தற்போது (6 ஆம் பக்கம் பார்க்க)

# பொலநறுவையில் துணிகரத் தாக்குதல்; 6 படையினர் பலி; பலர் படுகாயம்

## 10 வீடுகள், 15 காவலரண்கள் தகர்ப்பு

(பொலநறுவை)

**பொலநறுவை மாவட்டம் கரடிக்குளம் சிறிலங்கா இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள ஜெயந்தியா கிராமத்தில் அமைந்திருந்த மினி முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலொன்றை நடாத்தினர். இத்தாக்குதலில் ஆறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியதுடன் 15 காவலரண்களும், 10 வீடுகளும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. அங்கிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.**

நேற்று அதிகாலை 1-20 மணியளவில் விடுதலைப்புலிகளால் இம் மினிமுகாம் சுற்றிவளைக்கப்பட்டு திடீர் அதிரடித் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. 15 நிமிடங்கள் மட்டுமே நீடித்த இந்த அதிரடித் தாக்குதலால் 40க்கு மேற்பட்டோரை கொண்ட இம் மினிமுகாமின் 15காவலரண்களும், 10 வீடுகளும் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன. இவை பின்னர் முற்றாக அழிக்கப்பட்டன. இத்தாக்குதலின் போது 6க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் ஓடித்தப்பி விட்டனர். இம்முகாமிலிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

## மினிமுகாம் தகர்ப்பில் கைப்பற்றப்பட்டவை

(பொலநறுவை)

நேற்று பொலநறுவை ஜெயந்தியா கிராமத்திலுள்ள இராணுவத்தினரின் மினிமுகாமை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து தாக்கி அதைக் கைப்பற்றி பின்னர் முகாமை முற்றாக தகர்த்தனர்.

இத்தாக்குதலில் மினிமுகாமிலிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி — 01
★ 60 மி. மீ. மோட்டார் — 01
★ 60 மி. மீ. எறிகணை — 05
★ மோட்டார் பேஸ்பிளேட் — 01
★ ஏ. கே. கோல்சர் — 08
★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
★ நடுத்தர ரவைகள் — 2700
★ நடுத்தர காஸ்ரவை — 45
★ ஜி 3 ரவைக்கூடு — 01
★ ஜி 3க்கு உரிய கத்தி — 01
★ எம். 75 ரக கைக்குண்டு — 05
★ சப்பாத்து (சோடி) — 21
★ [illegible] — 08

## 'வாதுவ' மாவுடன் வந்தது

(வடமராட்சி)

'வாதுவ' கப்பல் 4 ஆயிரம் மெற்றிக்தொன் மாவுடன் நேற்றுக் காலை 8.00மணியளவில் பருத்தித்துறை இறங்குதுறையை வந்து சேர்ந்தது. இக்கப்பல் மூலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலுக்குச் சென்று மாவை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து மா இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. (யோ)

## தமிழ் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

ஆயுதக்கப்பலுடன் தொடர்பாம்

[கொழும்பு]

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 1991ஆம் ஆண்டில் ஆயுதங்களோடு மலேசியாவில் கைப்பற்றப்பட்ட கப்பல்ஒன்று தொடர்பாக மலேசிய அதிகாரிகளால் தேடப்பட்டவர் என்றும், இவர் கடந்த வெள்ளியன்று கட்டுநாயக்க விமானநிலையத்தில் சி.ஐ.டி. பொலிசாரால் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழுவில் பங்குபற்ற தமிழ் குழுக்கள் நிபந்தனை

(கொழும்பு)

அரசாங்க கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி என்பன பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக கூட்டாக யோசலனை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்குபற்றுவது பற்றி ஆலோசிக்க முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவும் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் ஜூன் 10-ம் திகதி கூடும்போது அதில் கலந்துகொள்ளும்படி விடுக்கப்பட்ட அழைப்புத் தொடர்

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இன்று தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ விடுதலைபபுலிகள் நிதித்துறை

## ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இனப்பிரச்சினை தீர்வில் இணக்கம் கண்டிருந்தோம்

— டக்ளஸ் தேவானந்தா

[கொழும்பு]

[illegible] செய்தியாளர் மாநாட்டில் [illegible]

ளால் இம் மினிமுகாம் சுற்றி வளைக்கப்பட்டு திடீர் அதிர டுமே நீடித்த இந்த அதிரடித் தாக்குதலால் 40க்கு மேற்பட் 10 வீடுகளும் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன.

லின் போது 6க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் ஓடித்தப்பி விட்டனர். இம்முகாமிலிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

# மினிமுகாம் தகர்ப்பில் கைப்பற்றப்பட்டவை

(பொலநறுவை)

நேற்று பொலநறுவை ஜெயந்தியா கிராமத்திலுள்ள இராணுவத்தினரின் மினிமுகாமை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து தாக்கி அதைக் கைப்பற்றி பின்னர் முகாமை முற்றாக தகர்த்தனர்.

இத்தாக்குதலில் மினிமுகாமிலிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி — 01
★ 60 மி. மீ. மோட்டார் — 01
★ ரி-56-2 ரக துப்பாக்கி — 03
★ ரி-56-1 ரக துப்பாக்கி — 01
★ ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகசின் — 07
★ ஏ கே. எல். எம். ஜி. கோல்சர் — 03
★ லிங் — 673
★ 60 மி. மீ. எறிகணை — 05
★ மோட்டார் பேஸ்பிளேட் — 01
★ ஏ. கே. கோல்சர் — 08
★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
★ நடுத்தர ரவைகள் — 2700
★ நடுத்தர காஸ்ரவை — 45
★ ஜி 3 ரவைக்கூடு — 01
★ ஜி 3க்கு உரிய கத்தி — 01
★ எம். 75 ரக கைக்குண்டு — 05
★ சப்பாத்து (சோடி) — 21
★ மில்றி பெல்ட் — 08
★ மழைக்கவசம் — 06
★ பாக் — 05
★ தண்ணீர்கான் — 02
★ தண்ணீர்கான் கோல்சர் — 10
★ உணவுப் பெட்டி — 02

## மினிமுகாம் தாக்குதலில் ஈழக்குமார் வீரச்சாவு

(பொலநறுவை)



பொலநறுவை ஜெயந்தியா மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரவேங்கை ஈழக்குமார் /சுமன் (அழகிப்போடி தயாபரன் புதுக்குடியிருப்பு - 4 மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடபகுதிக் கடலில் 3 மர்மக் கப்பல்கள்?

(கொழும்பு)

வடபகுதிக் கடலில் மூன்று மர்மக் கப்பல்கள் நடமாடக் காணப்பட்டதாக கொழும்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்களில் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் கொண்டு வந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் இந்திய இலங்கை கடற்படையினர் உசார்படுத்தப் பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது. எனினும் இம் மூன்று கப்பல்களும் இந்தியக் கரைகளில் இருந்து புறப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

## தேன் எடுக்கச் சென்றவர் இராணுவத்தால் கொலை

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் காவேரிக்குளம் பகுதியில் தேன் எடுக்கச் சென்ற பொதுமகனை இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிக் கொன்றனர். கொல்லப்பட்ட பொதுமகன் ஆலகாக்குடி வாகரைப் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகலிங்கம் (20) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேதினம் திருக்கோணமலை மாவட்டம் மூதூர் நாவலடிப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் கணேசபுரம் பகுதியில் அப்பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு இரத்தின வடிவேல் [வயது 28] என்ற இருபிள்ளைகளுக்கு தந்தையான குடும்பஸ்தரை கைது செய்து கொண்டு சென்றனர்.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இன்று தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ விடுதலைபபுலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஹெலி நோட்டம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி, தொண்டமானாறு, வளலாய் பகுதிகளை சிறிலங்கா அரசுக்கு சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று நேற்றுக் காலையும் நேற்று முன்தினம்இரவும் வட்டமிட்டு நோட்டமிட்டது.

இவ் உலங்குவானூர்தி மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு மேலாக பறந்து நோட்டமிட்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ரணிலின் திருமணம்?

[கொழும்பு]

பிரதமர் ரணில் விக்கிரசிங்கவிற்கு திருமணம் செய்து வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக

[6ஆம் பக்கம் பார்க்க]

கொக்கட்டிச்சோலையில்

## இராணுவ சுற்றிவளைப்பில் பொதுமகன் சுட்டுக் கொலை

[மட்டக்களப்பு]

கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நான்கு பொதுமக்களைக்கைது செய்து அதில் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அவரின் வீடும் எரிக்கப்பட்டது.

கடந்ததிங்களன்றுகாஞ்சிரன் குடாவை சுற்றிவளைத்தஇவர்கள் இந்த அ..ாவடித்தனத்தை மேற்கொண்டுள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த தவராசா என்ற பொதுமகனே கொல்லப்பட்டவராவார். ஏனைய மூவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# தெரிவுக்குழுவில் பங்குபற்ற தமிழ் குழுக்கள் நிபந்தனை

(கொழும்பு)

அரசாங்க கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி என்பன பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக கூட்டாக யோசனை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்குபற்றுவது பற்றி ஆலோசிக்க முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவும் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் ஜூன் 10-ம் திகதி கூடும்போது அதில் கலந்துகொள்ளும்படி விடுக்கப்பட்ட அழைப்புத் தொடர்பாக பரிசீலனை செய்த இக்கட்சிகள் கூட்டாக யோசனை சமர்ப்பிக்காதவரை இதன் அமர்வுகளில் பங்குபற்றப் போவதில்லை எனவும் கூறியுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசாவுடன்

## இனப்பிரச்சினை தீர்வில் இணக்கம் கண்டிருந்தோம்

– டக்ளஸ் தேவானந்தா

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கானதீர்வு தொடர்பாக எமக்கும் முன்னாள் ஜனாதிபதிக்குமிடையே உடன்பாடு ஒன்று இருந்தது என்று ஈ. பி. டி. பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும்கூறுகையில்; வடக்கும் கிழக்கும் இணைந்ததாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என்றும், இது

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜனநாயக விரோத நடவடிக்கையில்

# பிரேமதாசாவை வென்ற டி. பி. விஜயதுங்க

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க முன்னைய ஜனாதிபதி பிரேமதாசாவை ஜனநாயக விரோத நடவடிக்கையில் மிஞ்சிவிட்டார் என ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார். எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்ற இரு மாகாணசபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியினரை பதவியில் அமர்த்தியதன்மூலம் இதனைச் சாதித்துள்ளார் என அவர் விளக்கிக் கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; இதற்குமுன்னர் நடைபெற்ற தேர்தல்களில் மோசமானஊழல்கள்நிலவியபோதும் வெற்றிபெற்றவர்களுக்கு ஆட்சியை வழங்காத மோசமான நடவடிக்கை முன்னர் எப்பொழுதும் மேற்கொள்ளப்பட்டதில்லை. அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தேவையான நடவடிக்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண அரசின் அதிகாரம் மத்திய அரசால் பறிப்பு

நிமால் சிறிபால தெரிவிப்பு

(கொழும்பு)

''மாகாண அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பல்வேறு அதிகாரங்களையும் உரிமைகளையும் மத்திய அரசாங்கம் விழுங்கியுள்ளது. அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமூலம் தெளிவின்மையாக இருப்பதாலேயே இது சாத்தியப்படுகிறது'' இவ்வாறு வடமேல் மாகாண தென் மாகாண சபைகளின் எதிரணியினரின் சட்டத்தரணியாக செயல்படுபவருமான திரு. நிமால் சிறிபாலசில்வா கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம், பொதுசன சேவைகள் தொடர்பான பல அதிகாரங்கள்போன்றவை இதுவரை சட்டரீதியாக வழங்கப்படவில்லை. மாகாணசபைக்கான அதிகாரங்கள் தொடர்பாக இன்னி

[6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் புலிகள் எதிர்ப்பு பொலிஸ் படைப் பிரிவு

## ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கையாம்

(கொழும்பு)

கொழும்பில் புதிதாக விடுதலைப் புலிகள் எதிர்ப்பு பொலிஸ்படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முக்கிய அரசியல் வாதிகளையும், உயர் அதிகாரிகளையும் கொலை செய்யும் நோக்கில் புலிகளின் பிரிவு ஒன்று கொழும்பினுள் நுழைந்துள்ளதாகக் கிடைத்த புலனாய்வு அறிக்கையை தொடர்ந்தே இந்த புதிய படை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இந்த பொலிஸ் பிரிவில் தெரிந்தெடுக்கப்பட்ட பொலிசார் அங்கத்துவம் பெறுகின்றனர். இவ்வாறு 40 பேர் கொண்ட இந்தப் பிரிவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் குணவர்தனா தலைமை தாங்குகின்றார்.

விசேட அதிரடிப் பொலிஸ் பயிற்சிபெற்ற இந்த புலிகள் எதிர்ப்பு பொலிஸ்படை சன நடமாட்டம் மிகுந்த இடங்களிலும் போக்குவரத்து நெரிசலான பகுதிகளிலும் மற்றும் பல இடங்களிலும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை கண்டுபிடிக்கும் பொருட்டு இருபத்திநான்கு மணிநேரமும் ரோந்துப் பணியில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கப்பலில் பொருள்கள் ஏற்றல் வானிலையால் பாதிப்பு

யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருள்கள் கொழும்பில் கப்பலில் ஏற்றும் வேலைகள் வானிலை காரணமாக மேலும் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. எம். வி. கோமாரி கப்பல் 3500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டிருப்பதாகவும், திருமலையிலிருந்து 2500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல நிலையில் உள்ள Sansui Integrated Amplifier (Au 317) 4 Speakers போடக் கூடியது விற்பனைக்குண்டு. ஒலிப்பதிவுக் கூடங்களுக்கு ஏற்றது டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6714)

### புதிய வகுப்புகள்

30-05-93 ஞாயிறு இன்று ஆண்டு 3 புதிய வகுப்புகள் பிற்பகல் 2-00 மணிக்கும், ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class பிற்பகல் 4-00 மணிக்கும், ஆங்கில இலக்கியம் பிற்பகல் 4-30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4999)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிடடவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-6584)

### வேப்பெண்ணை

வேப்பெண்ணைக் கிருமி நாசினி உங்கள் தோட்டப் பயிர்களையும் எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப் படுத்த வல்லது இது மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன் பெறுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4938)

### வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி புழுக்களை அழித்து — மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயன ...

## இளம் குடும்பஸ்தர் கடற்படையால் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவில் சிறிலங்கா கடற்படையினரால் அப்பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

தெற்குப் பகுதியாகிய வங்களாவடியைச் சேர்ந்த இக் குடும்பஸ்தர் நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு சுவாமி தரிசனம் செய்வதற்காக சென்று கொண்டிருந்த போது வழியில் ரோந்து வந்த கடற்படையினர் அவரை வழிமறித்து நையப்புடைத்தனராம்.

இதனால் படுகாயம் அடைந்த நிலையில் அக் குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் எனவும் மேலும் தெரியவருகிறது [22]

## கோழிகளுக்கு தூக்க நோய்

(தொல்புரம்)

தொல்புரம் மூளாய், சுழிபுரம் பகுதிகளில் கோழிகளுக்கு தூக்க நோய் ஆரம்பித்துள்ளது இத் தூக்க நோய் ஏற்பட்டதனால் கோழிவளர்ப்பு தொழிலை மேற்கொண்ட பலருக்கு பெரிய நஷ்டம் ஏற்படும் அறிகுறி தென்படுகிறது.

மேலும் இந்நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கையை அரச கால்நடை சிகிச்சை நிலையங்களின் உதவியுடன் செயல்படுத்த மக்கள் நாடியுள்ளனர். (41)

போராட்ட சிந்தனை

## நுண்கலை ஊடாகவும் வளர்க்கப்படுகின்றது

(குருநகர்)

''எமது தாயக மீட்புப் போராட்ட சிந்தனைகளை வேறு கலை, இலக்கியங்களைப் போன்று நுண்கலைகளுக்கு ஊடாகவும் வெளிப்படுத்த முடியும். சிற்பம் சித்திரம் போன்ற நுண்கலை வடிவங்களும் மக்கள் மத்தியில் போராட்ட சிந்தனைகளை வளர்த்து வருகிறது என்பதற்கு ஆதாரமாக இங்கே ஆரம்பித்து வைத்திருக்கும் சித்திரக் கண்காட்சியில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட ஓவியங்கள் அத்தகையதாக இருப்பதில் இருந்து உணர்ந்து கொள்ளலாம்.

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை கலை சித்திரக் கண்காட்சியைத் திறந்து வைத்துப்பேசிய திரு. வை. சிவசுப்பிரமணியம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''இறை வழி கலைப்பணி என்னும் கோட்பாட்டை உடைய திருமறைக் கலாமன்றம் அதற்கும் அப்பால்சென்று 34 துறைகளில் மாணவருக்கு எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருப்பது கண்கூடு. மன்றத்தின் அளப்பரியபணிகளில் சித்திரக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கதொன்று.

சித்திரக் கண்காட்சிகளை அடிக்கடி மக்கள் மத்தியில் காண்பித்து வருவதால் சித்திரங்கள் பற்றிய புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள முடியும்'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நூற்றுக் கணக்கான ஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்தன. ஆயிரக் கணக்கான மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர் பார்வையிடுச் சென்றனர். (21)

யாழ்நகரின் புகழ்பூத்த சமூக சேவையாளன்
வைத்தியக் கலாநிதி அமரர்
**ஜே. பி. சி. பிலிப்ஸ்**
அமரத்துவம் அடைந்த 2ஆம் ஆண்டு
**நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்**
காலம்: 31-05 1993 திங்கள் பி. ப. 4 மணி
குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்

## 1-ம் ஆண்டு இதய நினைவு அஞ்சலி



வீரப்பிறப்பு:
20. 07. 1969

வீரச்சாவு:
30. 05. 1992

### லெப். ராஜன்

[அன்னலிங்கம் மதியழகன்]

யாழ். கோட்டையிலும், மணலாறு வீரப்போரிலும் சாதனை புரிந்து நெஞ்சில் பாய்ந்த எதிரியின் துப்பாக்கி குண்டினால் தமிழன் நிலத்தை செந்நிறமாக்கி, உரிமை முழக்கம் செய்து வீரச்சாவடைந்த எங்கள் வீரத் தமிழ் மறவா, உன் ஆத்மா சாந்தியடைய நாங்கள் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

30.05.1993 இன்றுநடைபெறும் ஆண்டுத்திவசத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

அன்புத்தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள், பெறாமக்கள்,
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (4981)

## பதவி வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன:

1. **பிரதம செய்தித் தொகுப்பாளர்:**
வயது: 25-50

வானொலி அல்லது பத்திரிகையொன்றில் ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம்.

தமிழ், ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், சிங்கள மொழியறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

2. **செய்தித் தொகுப்பாளர்கள்:**
வயது: 21-40

பத்திரிகையொன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம். வானொலியில் பணி புரிந்த அனுபவம்.

தமிழில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் ஆங்கில, சிங்கள மொழிஅறிவு விசேட தகைமைகளாகக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி
**1993-06-15**

விண்ணப்பங்களை புலிகளின் குரல், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (சி-6706)

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-30

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-கிரான் குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

குமார் (நடராசா கிருஷ்ணகுமார்-இதயபுரம்-மட்டு)

வசந்த் (இராஜேந்திரன் அருளானந்தராசா-அமிர்தகழி-மட்டு)

1987 ஆம் ஆண்டு-யாழ் நாவற்குழி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

நிசாந்தன் (நடராசா இராசகுலேந்திரன்-குமரபுரம், பரந்தன்-கிளிநொச்சி)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

2ம் லெப்.வாசன் (நடராசா சிறிகாந்தன்-சின்னப் பண்டிவிரிச்சான்-மடுக்கோயில் - மன்னார்)

வடமராட்சியில் சிறிலங்காபடையினர் 5-வதுநாளாக ஒபறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

கஜன் (ரவி செல்வக்குமார்-''வனிதா வாசா'' பற்றீமா வீதி, பண்டத்தரிப்பு-யாழ்)

இதே நடவடிக்கையின் போது உடுப்பிட்டிப்பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

சீலன் - 7-ம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

கப்டன் நந்தன் (செல்லையா சந்திரன் - கண்டிவீதி, பனிக்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)

2-ம் லெப். சடையன்/சுதா (குருசாமி யோகபாலன் - சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

முல்லைவேந்தன் (அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயக்குமார் - சிலாவத்தை - முல்லைத்தீவு)

குலேந்திரன் (கனகரத்தினம் சாந்தகுமார் - துர்க்கா வீதி, 4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

வெற்றி (செல்வசீலன் புண்ணியராஜ் - இறம்பைக் குளம், ஓமந்தை - வவுனியா)

லெப். மகிந்தன்/மைந்தன் (முருகேசபிள்ளை சிறிதரன் - பழையகமம், முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி)

2-ம் லெப். சிவம் (துரைசாமி ராஜேந்திரன் - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

கப்டன் குட்டி/அன்பு (ஐயம்பிள்ளை சிவகுமார் - கந்தரோடை வீதி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் - யாழ் )

லெப். ராஜன் (அன்னலிங்கம் மதியழகன் - உடுவில் தெற்கு, மானிப்பாய் - யாழ்.)

யாழ். வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

நெடியவன் / வாசன் (இரட்ணம் சுதாகர் - புதுக் ...

வேப்பெண்ணைக் கிருமி நாசினி உங்கள் தோட்டப் பயிர்களையும் எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப் படுத்த வல்லது இது மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன் பெறுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34. ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4938)

## வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி புழுக்களை அழித்து — மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள் எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி 34, ஆடிய பாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4939)

## சிகிச்சை நிலையம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை வீதியில் இது வரை காலமும் செயல் பட்டு வந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் கடந்த புதன் கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஜோ எகட்டனின்

ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11.30 மணி முதல் பகல் 3.00 மணி வரை கிடைக்கும்.

மீன் / இறைச்சி ரூபா 30/-

மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு விசேட சலுகை

எல்லாவிதமான உணவு ஓடர்களும் கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளிமகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி

[சி-6718]

மறைக் கலாமன்ற கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை கலை சித்திரக் கண்காட்சியைத் திறந்து வைத்துப்பேசிய திரு. வை. சிவசுப்பிரமணியம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகை அவர் தெரிவித்தார்.

நூற்றுக் கணக்கானஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்தன. ஆயிரக் கணக்கான மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர் பார்வையிடுச் சென்றனர். (21)

யாழ்நகரின் புகழ்பூத்த சமூக சேவையாளன்

வைத்தியக் கலாநிதி அமரர்

## ஜே. பி. சி. பிலிப்ஸ்

அமரத்துவம் அடைந்த 2ஆம் ஆண்டு

## நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

காலம்: 31-05 1998 திங்கள பி. ப. 4 மணி

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்

இரங்கற் பூசைப் பலியைத் தொடர்ந்து

யாகப்பர் மண்டபத்தில்

## அஞ்சலிக் கூட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

அமரர் ஜே. பி. சி. பிலிப்ஸ்

ஞாபகார்த்த சபை.

அன்பளிப்பு:

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்

பதிவு இல: S.2 7, யாழ்ப்பாணம்.

(சி/6719)

## 45ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் வீரப்பிறப்பு: 04-10-1969

தாயக மண்ணில் வீரச்சாவு: 16-03-1993

## லெப்டினன்ட் அன்பழகன் (கிருபன்)

**முருகன் - ரவி**

ஆற்றலின் அமைவிடம்
அகல்விளக்கு அன்பழகனுக்கு
அகம் ஆழ்ந்த அஞ்சலிகள்

நாட்கள் பல சென்றாலும் உன் பிரிவு மறவாத

நெல்லியான் வீதி, பெரியபுலோ, சுழிபுரம்.

தந்தை, தாய் சகோதரர்கள் உற்றார், உறவினர்கள். நண்பர்கள். (5003)

வெய்திய,

**குமார்** (நடராசா கிருஷ்ணகுமார்-இதயபுரம்-மட்டு)

**வசந்த்** (இராஜேந்திரன் அருளானந்தராசா-அமிர்தகழி-மட்டு

1987 ஆம் ஆண்டு-யாழ் நாவற்குழி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**நிசாந்தன்** (நடராசா இராசகுலேந்திரன்-குமரபுரம், பரந்தன்-கிளிநொச்சி)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2 ம் லெப்.வாசன்** (நடராசா சிறிகாந்தன்-சின்னப் பண்டிவிரிச்சான்-மடுக்கோயில் - மன்னார்)

வடமராட்சியில் சிறிலங்காபடையினர் 5-வதுநாளாக ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கஜன்** (ரவி செல்வக்குமார்-''வனிதா வாசா'' பற்றீமா வீதி, பண்டத்தரிப்பு-யாழ்)

இதே நடவடிக்கையின் போது உடுப்பிட்டிப்பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**வடிவு/லோகன்** (கனகசபை லோகேஸ்வரன்-சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு யாழ்)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிககியதில் வீரச்சாவெய்திய,

★ **மெய்** (க. மெய்யழகன்-தம்பலகமம்-திருமலை)

சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்றுவயதுக் குழந்தை.

1988 ஆம் ஆண்டு நிலாப்பொலவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**விரலி/கரி** (வீரக்குட்டி பேரின்பநாதன்-மூதூர்-திருமலை)

1989 ஆம் ஆண்டு மாமுனையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப்.முத்து** (சுந்தரலிங்கம் ஞானவேல்-மானாங்கனை, வல்வெட்டித்துறை)

இதே சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**கஜன்** (கனகசபை தர்மராசா-பூனாவளைத் தோட்டம், கரணவாய், கரவெட்டி-யாழ்)

**தரன்** [குணரத்தினம் ஞானசேகரம் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.]

**அசோக்** [கந்தசாமி ஜெயந்தன் - அராலி, வட்டுக் கோட்டை - யாழ்.]

யாழ். நீர்வேலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பினபோது சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சிவனேசன்** [சபாரட்ணம் சிவனேசன் - நீர்வேலி, யாழ்.]

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். நவம்** [தம்பையா தயாபரன் - கொக்குத் தொடுவாய் - மணலாறு]

**மயூரன்** [பத்மநாதன் சந்திரநாதன் - விசுவமடு - முல்லைத்தீவு]

**கப்டன் பிரகாஷ்** [இலங்கேஸ்வரன் சங்கர் - வவுனியா]

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து எமைப் பிரிந்த -

**மேஜர் சுருளி** [கந்தசாமி சிறிதரன் - சுதுமலை வடக்கு, மானிப்பாய் - யாழ்.]

வவுனியா - குடியிருப்புப் பகுதிகளிலிருந்து சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போன பல தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு முல்லைததீவு, 5-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் பிரேமச்சந்திரன்** [அழகையா தவேந்திரன் - 16/5, சிவபுரி - திருமலை]

**லெப். மாறன்/சுலோஜன்** (பாக்கியதுரை தயாள

**முல்லைவேந்தன்** (அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயக்குமார் - சிலாவத்தை - முல்லைத்தீவு)

**குலேந்திரன்** (கனகரத்தினம் சாந்தகுமார் - துர்க்கா வீதி, 4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**வெற்றி** (செல்வசீலன் புண்ணியராஜ் - இறம்பைக்குளம், ஓமந்தை - வவுனியா)

**லெப். மகிந்தன்/மைந்தன்** (முருகேசபிள்ளை சிறிதரன் - பழையகமம், முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி)

**2-ம் லெப். சிவம்** (துரைசாமி ராஜேந்திரன் - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

**கப்டன் குட்டி/அன்பு** (ஐயம்பிள்ளை சிவகுமார் - கந்தரோடை வீதி. மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் - யாழ் )

**லெப். ராஜன்** (அன்னலிங்கம் மதியழகன் - உடுவில் தெற்கு, மானிப்பாய் - யாழ்.)

யாழ். வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நெடியவன் / வாசன்** (இரட்ணம் சுதாகர் - புதுக்குடியிருப்பு, தம்பலகாமம் - திருமலை)

**மேஜர் எழிலமுதன் / சுதன்** (நமசிவாயம் உமாசுதன் - கூழாவடி, ஆனைக்கோட்டை - யாழ்)

**கப்டன் வீரத்தேவன் / பியூஸ்மாக்** (துரைராஜா சிவலிங்கம் - ஏவி வீதி. அரியாலை - யாழ்)

**கப்டன் பாவாணன் / கெனடி** (பத்மநாதன் மயூரன் - சுதர்சன் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்.)

**கப்டன் செல்வன்** (செல்லத்துரை தெய்வசபாநாதன் - புலோப்பளை மேற்கு - பளை)

**லெப். நித்தி / புகழேந்தி** (சிவசுப்பிரமணியம் சம்பூரணநாதன் - சில்லாலை-மேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்.)

**லெப். இறையன்பன் / யோன்சன்** (திருச்செல்வம் ரவிச்சந்திரன் - 1-ம் வட்டாரம், புங்குடுதீவு யாழ் )

**வெற்றியரசன் / ஜெயந்தன்** (கிருஷ்ணபிள்ளை நாகலிங்கம் - ஐயனார் கோவிலடி, சண்டிலிப்பாய் - யாழ்.)

**இன்பன்** (கணேசபிள்ளை துஷ்யந்தன் - கோப்பாய் வடக்கு - யாழ்)

**வேல்மாறன்** (ஐயாத்துரை மனோகரன் - அல்வின் வீதி, காரைநகர் - யாழ்.)

**புகழேந்தி / லம்பா** (பொன்னுத்துரை மதனசிங்கம் ''கருணைவாசம்'' அளவெட்டி வடக்கு - யாழ்.)

யாழ். தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**நற்குணன் / நிரோஜன்** (சண்முகநாதன் யோகநாதன் - பருத்தித்துறை வீதி. நல்லூர் - யாழ் )

யாழ் வலிவடக்கில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இளம் பெண்கள், இளைஞர்கள், முதியோர், சிறுவர்கள் மற்றும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை பொறியிலாளரான பெண் உட்பட கொல்லப்பட்ட 23 பேர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6711)

யாழ்ப்பாணம்

# மாசுறும் சூழலும் நாசமுறும் மனித குலமும்

'தேசம் மாசுபடின் என் தேசம் மாசுபடும்' என்ன பொருத்தமான வார்த்தைகள் இவை. இந்த வார்த்தைகள் இற்றைக்குப் பலவருடங்களுக்கு முன் ஒரு சிலரால் மட்டுமே உச்சரிக்கப்பட்ட வார்த்தைகள். ஆனால் இன்று உலகில் உள்ள அத்தனை மனித உயிர்களுமே உச்சரிக்கும் வார்த்தைகளாய் இது மாறியுள்ளது. அந்தளவுக்கு பூமியை மனிதன் மாசுபடுத்தி விட்டான்.

பூமியை மனிதர்கள் மாற்றியிருக்கும் தன்மையைப் பார்ப்பதற்கு விண்வெளிக்குப் பறந்து செல்ல வேண்டியதில்லை. இன்றைக்கும் நாம் அருந்துவதில், சுவாசிப்பதில், முகர்வதில், பார்ப்பதில், மாசு நிறையவே நிறைந்திருக்கின்றது. 100 வருடங்களுக்குள்ளாக, அதிலும் கடந்த 30 வருடங்களில் மனிதர்கள் பூமியை பேரழிவின் விளிம்பிற்கே கொண்டு வந்து விட்டிருக்கின்றார்கள். இப்போது பூமியில் சுற்றுச் சூழல் அழிவு தான் மனித குலததிற்கு மிகப் பெரிய ஆபத்து.

25 ஆண்டுகளில் பூமியின் உஷ்ணம் சராசரி ஒன்றுமுதல் இரண்டு டிகிரி வரை அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளில் அது ஆறு டிகிரி வரை கூட அதிகரிககலாம். பெருங்கடல் வெப்பத்தை ஈர்த்து சேமிப்பதால் நீர் மட்டம் அதிகரிக்கலாம். கடல் புகுந்து விடும் நிலையிலுள்ள 60 தீவு நாடுகளுக்குத் தான் உடனடி ஆபதது. மாலைதீவு போன்ற சில தீவுகள் ஒரேடியாக மூழ்கிப் போகக் கூடும். இதே வேளை பூமியின் உஷ்ணம் இப்போது வளமாக இருக்கும் பகுதிகளின் ஈரப் பதத்தைப் பெருமளவில் குறைத்து நிலங்களைப் பாலைவனம் போல ஆக்கிவிடும்.

அண்டார்டிகாவில் ஓசோன் படலத்தின் பெரிய ஓட்டை விழுந்து விட்டதை எண்பதுகளின் ஆரம்பத்திலேயே விஞ்ஞானிகள் கண்டு தெரிவித்தார்கள். சூரியன் உதிரும் அதி ஊதா கதிர்களிடமிருந்து உயிர்களைப் ப துகாக்கும் கேடயமான ஓசோன் படலம் 30 சதவீதம் குறைந்து விட்டது. இதன் காரணகர்த்தாவும் மனிதனே தான். அபிவிருத்தியடைந்த நாடுகளில் மககள் அதிகம் வாழும் பகுதியில் ஓசோன் ஓட்டை வீழ்ந்து தோல் புற்று நோயால் மக்கள் அதிகம் பலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றுடன் தோலில் புதிய புதிய நோய்களும் இதனால் உருவாகி வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்நிலை போதாது என்று பசுமை பூத்துக் குலுங்கும் காடுகளைக் கூட கண்மூடித்தனமாக அழித்தொழிக்கும்நடவடிக்கைகளில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. ஒரு காலத்தில் அடர்ந்த வனமாகஇருந்த பிரேசிலின்அமேசானியக் காடுகள், மலேசியாவின்பிரமாண்டமான மூங்கில் காடுகள், கானாவின் புதர்க்கா கள் ஆகியவற்றை உதாரணமாக கூறலாம். காடழிப்பால் ஒவ்வொரு ஆண்டும் 100க்கும் மேற்பட்ட உயிரின வகைகள் அற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனா.

மேற்கூறப்பட்டவற்றைவிட அதிகமாக பல்வேறு காரணங்களால் பூமி மாசுறுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களால் பூமியில் ஏற்பட்டு வரும் நிலை எமது தமிழீழ தேசத்தையும் விட்டு வைக்கப் போவதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஏற்பட்டு வரும் மாசடைவுகளைப்போல் பாரிய அளவில் எமது சூழல் மாசடையவில்லை என்பது ஒரு மகிழ்வான விடயமே. ஆயினும் சூழல் மாசடைவினால் எமது தேசமும் பல பாதிப்புக்குள்ளாகி வருவது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. கோடைகள் வர வர அனல் தினங்களாக மாறிவருகின்றன. மழை வீழ்ச்சி கூட மந்தமாகவே உள்ளது. உலகமே விழித்துக்கொண்டு 'சூழலுக்கென மாநாடு' நடத்தும்போது நடப்பது நடக்கட்டுமெனவும், வெள்ளம் தலைக்கு மேல் போனாலும் என்ன ஆகிறது பார்ப்போம் எனவும் நாம் ஒதுங்கி நிற்பது எந்தவகையில் பொருந்தும்? எமது சூழலைக் காப்பதன் மூலம் எம்மையும், எமது சந்ததியையும் காப்போம் என உறுதி எடுப்போம்.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தனியே நுரையீரல்கள் உண்டு. ஆனால் அத்தனை உயிரினங்களுக்கும் உயிர்வாழ்வதற்கான ஒரே நுரையீரல் மரங்களிடையே தான் உள்ளது. சுவாசப்பைக்கு ஏதேனும் ஊறு விளைந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல, மரங்கள் அழிக்கப்பட்டால் மனித உயிர்களும் மற்ற உயிரிகளும் வாழும் இந்த இயற்கைச் சூழல் மாசுற்று அழிய நேரிடும் என்பது உறுதியாகும். மரங்கள் மனித இனத்தின் இதயமாக, இயற்கையின் நுரையீரலாக, பிராண வாயுவின் பிறப்பிடமாகவிளங்குகின்றன. இத்தகைய மகத்தான சேவை புரியும் மரங்களைப் பாதுகாக்கவும், நட்டுப் பராமரிக்கவும் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடுகளும் எதிர்காலத்தில் ஒரு வளமான தேசத்தை உருவாக்கும் அத்திவாரக் கற்களாகும். இதுவெல்லாம் தாமதமின்றிச் செய்யப்படல் வேண்டும். ஆபத்து எம் குழந்தைகளின் எதிர்காலத்தில் இல்லை. இங்கேயே இப்போதே உலகில் உள்ள அத்தனை நாடுகளும் ஒன்றிணைந்து ஒவ்வொருவரும் தங்கள் சுற்றாடலைப் பேணும் எண்ணத்தின் வெளிப்பாடாக வருடத்தில் ஒருநாள் உலக சுற்றாடல் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. பிரகடனப்படுத்தப்பட்ட அத்தினமான ஜூன் 5ஆம் திகதியை எமது தேசத்தின் சூழலைப் பாதுகாக்க நாமும் உறுதியெடுப்போம்! செயற்படுவோம்!

நன்றி:
'சூழல் பாதுகாப்புப் பகுதி'
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்,

## மத்தியஸ்த நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 22 5 93 ல் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் திரு ரி. ஆர். அருமைநாயகம் உபதலைவர்கள் திரு சி.நந்தகுமார் திரு.எஸ்.பி ரஜீவன் திரு. டி. எம். வேதாபரணம் திரு சி. நடேசன் திரு. சி. என். வித்தியாதரன் செயலாளர் திரு எஸ் விமலதாசன் உப செயலாளரும் பொருளாளரும் திரு.எஸ். ஜே. அற்புதானந்தன் கணக்காய்வாளர் திரு பி. சி. அன்ரனி.

த்துடன் ஐந்து பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (17)

## ஒத்திவைப்பு

"யாழ் கல்வித் திணைக்கள நலன்புரிக் கழக நூலக நிதி சம்பந்தமாகவெளியிடப்படும், நேற்றுமுன்தினம் குலுக்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டு அடுத்த மாதம் 28ஆம் திகதி குலுக்கப்படும் என்பதை நலன்புரிக் கழக தலைவர் அவர்களும், யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தருமான திரு. செ. கணபதிப்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## "நகர" கப்பலில் அரச ஊழியர்

[கொழும்பு]

திருக்கோணமலையில் இருந்து சுமார்70அரச உத்தியோகத்தர்கள் கப்பல்மூலம்பருத்தித் துறைக்கு வரவுள்ளனர்.

"நகர" என்ற கப்பல்மூலம் அடுத்த மாதம் 1ஆம் திகதி காங்கேசன்துறைக்கு வரும் இவர்கள் அங்கிருந்து பருத்தித்துறைக்கு வருவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

## வெள்ளத்திற்கு நால்வர் பலி

தற்போது பெய்து வரும் பெரும் மழையின் காரணமாக தென்னிலங்கையில் பெரும் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதாகவும், ஒன்பதாயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும் நான்கு பேர் வெள்ளத்திற்கு பலியாகியிருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

## யோகாசனக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

அகில இலங்கை சர்வமத

## பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்க சமாசத்தின் சகல பகுதிக்கிளைகளிலும் "ஏ" பகுதி வறுமை நிவாரண உணவு முத்திரை எட்டாவது தொடர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இதனை, உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் தத்தமது கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் தகுந்த ஆதாரத்துடன் சென்று பெற்றுக்கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலக செயலர் திரு. க. குணராசா தெரிவித்துள்ளார். (24)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
31-1-1964

வீரச்சாவு
30-5-1992


### லெப்டினன்ட் புகழேந்தி

பொன்னுத்துரை - மதனசிங்கம்
(லம்போ, சின்னமதி)

| | | | |
|---|---|---|---|
| எழுதா | மறையா | யுணர்வா | யுயிராய் |
| பழுதே | துமிலா | விதமே | பதிவாய் |
| விழுகா | யுறவே | விதையா | கினையோ? |
| புகழேந் | தியமா | புலியே | மதனா! |
| வழிமே | லொளியே | யளவூர் | நிதியே |
| விழிமே | லெரியோ | டெழுமா | தவமே |
| தொழுதே | பணிவோ | மெனநா | மெழுவோம் |
| அழியா | நெடிதாம் | புகழே | வருவாய்! |

(4997) அளவெட்டி மகாஜன சபை

## நீங்காத நினைவின் ஆண்டு 14



பிறப்பு
27-11-1961

இறப்பு
30-05-1979

மசல்வி காணிக்கைமலர்

## 1-ம்ஆண்டுநினைவலைகள்



## கொழும்பில் வதியும் தமிழர் பொலிஸில் பதிய வேண்டும்

- எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் அவ்வப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்வது அவசியமானதாகும் என்று இராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இவ்வாறு வசிககும் தமிழர்கள் தமது வீடுகளுக்கு வந்து தங்கிச் செல்லும் நண்பர்கள் மற்

தவிர்த்துக் கொள்வது நல்லது என்றும் தெரிவித்துள்ளார்.

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நினைவுப் பேருரை வரிசையில் இன்று ஞாயிறன்று முன்னாள் அதிபர் அமரர்

வேளை பூமியின் உஷ்ணம் இப்போது வளமாக இருக்கும்

விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனா.

ருக்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல, மரங்கள் அழிக்கப்பட்டால் மனித உயிர்களும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்,

இவர்கள் அங்கிருந்து பருத்தித்துறைக்கு வருவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### லெப். வேந்தன்/கில்மன்

(சாள்ஸ் அன்ரனி விசேட படைப்பிரிவு)

வேலாயுதபிள்ளை வரதன்

(பளை ம. வி. உயர்தர மாணவன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 24-11-70 | 09-06-92 |

திதி: 30-05-93

வரதனென்று பெயர்படைத்த தமிழீழ வேந்தனே
மானாபிமானமுள்ள தமிழீழ காந்தனே
விரைந்து சென்று வீரசொர்க்கம் சென்றாய்-எங்கள்
சொந்த மண்ணை மீட்கவென்று நின்றாய்

வேலாயுதபிள்ளையும் வனஜலோஜினியும்
மிகுதவத்தால் பெற்ற அளவெட்டி மணிவிளக்கே
ஞானமெல்லாம் புகழும் வீரப்புலி இயக்கம்
நயந்து புகுந்து தமிழ் மாவீர சொர்க்கம் கண்டாய்

அருணோதயாக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியும்
மருவு பலாலிக் கல்லூரியில் உயர்கல்வியும் பெற்றாய்
பெருகிடும் தமிழ் இனத்தின் துயர் உணர்ந்தாய்
தருமப்புலி இயக்க வழி நடந்தாய்.

மணலாற்றிலே இரத்தப் புனலாறு பாய்ந்திட
வந்தெதிர்ப் படைப் பிணங்கள் மலையாய் குவித்து
அணையாத மாவீர ஜோதியாய்ப் பொலிகிறாய்
தணியாத தாகத் ''தமிழ் ஈழம்'' தருகிறாய்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வேளாவை, பாசமிகு அப்பா, அம்மா, அக்கா,
அளவெட்டி. (4990) அத்தான், மருமகன்.

## கொழும்பில் வதியும் தமிழர் பொலிஸில் பதிய வேண்டும்

- எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் அவ்வப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்வது அவசியமானதாகும் என்று இராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இவ்வாறு வசிக்கும் தமிழர்கள் தமது வீடுகளுக்கு வந்து தங்கிச் செல்லும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் பற்றிய விபரங்களையும் பொலிசாரிடம் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அடையாள அட்டை அல்லது தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமின்றி நடமாடுவதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றும் தெரிவித்துள்ளார்.

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நினைவுப் பேருரை வரிசையில் இன்று ஞாயிறன்று முன்னாள் அதிபர் அமரர் பொ. ச. குமாரசாமி நினைவுப் பேருரை பிற்பகல் 3-30 மணியளவில் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ''சென்ற காலத்துப் பழுதிலாத்திறன்'' என்னும் பொருளில் திரு க. சி. குலரத்தினம் உரை நிகழ்த்தவுள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



### திரு. கந்தையா ஞானச்செல்வம்

(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகஸ்தர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 06 - 22 | 30 - 04 - 93 |

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் திருவுருவாய் உண்மையின் ரூபமாய் எமக்கெல்லாம் வழிகாட்டியாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு பலவழிகளில் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். 30.5 93 இன்றுநடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4980)

## வெள்ளத்திற்கு நால்வர் பலி

தற்போது பெய்து வரும் பெரும் மழையின் காரணமாக தென்னிலங்கையில் பெரும் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதாகவும், ஒன்பதாயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும் நான்கு பேர் வெள்ளத்திற்த பலியாகியிருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

## யோகாசனக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாதாந்தம் நடத்தும் கருத்தரங்கில் இன்று பிற்பகல் 3 30மணிக்கு ''யோகமும் ஆளுமை வளர்ச்சியும்'' என்னும பொருள் பற்றி வண. பிதா எஸ். டேமியன், யோகிராஜன், யோகாசன கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## இலக்கிய அவை கூட்டம்

(குருநகர்)

யாழ்-திருமறைக் கலாமன்ற இலக்கிய அவை இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு கூடும்.


யாழ்-பிரதான வீதி மன்றக் கேட்போர் கூடத்தில் கூடும் மேற்படி இலக்கிய அவையில் திரு எஸ் தம்பையா 'இலக்கிய இன்பம்' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார். (21

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மே மாதத்தில் [5ஆம் மாதத்தில்] வீரச்சாவடைந்த தீவக கோட்ட மாவீரர்களுக்கான 'வீர வணக்க கூட்டம்' நாளை திங்கட்கிழமை இரவு 8-00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரக்கல்லூரியில் நடைபெறும் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர், வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன், மகளிர் அமைப்பின் யாழ். மாவட்ட துணைப் பொறுப்பாளர் செல்வி சுகுணா ஆகியோரின் நினைவுப் பேருரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (22)

## ஆண்டு 14



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27-11-1961 | 30-05-1979 |

### செல்வி காணிக்கைமலர் அந்தோனிசாமி (தவேரா)

பதின்நான்கு ஆண்டுகள்
பறந்தோடி விட்டதம்மா!
காணிக்கை மலரென்ற நாமத்தை
சூட்டிவைத்தோம்!
இறைவன் காணிக்கை பெற்றனரோ?
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
நீத்ததுயர் ஆற்றாது மாமனும்
மற்றோரும் துடிக்கின்றார்!
என்றும் உன் நினைவில் வாழும்!

பெற்றோர், சகோதர-சகோதரிகள்,
அம்மாச்சி-தாத்தா,
மாமன்மார், அத்தைமார்,
சித்தப்பாமார், சித்திகள்.

35/12, மவுண்கார்மல் வீதி,
குருநகர்.

(சி/6703)

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 08 - 11 - 1970 | 30 - 5 - 1992 |

### கப்டன் பாவாணன் (கெனடி)

[பத்மநாதன் மயூரன்]

இழந்த இறைமையை மீட்பதற்காக
இழக்க முடியாத உன்னை இழந்தோம்
மலரும் தமிழீழத்தில் உன்முகம் காண்போம்

இன்று நடைபெறும் (30-05-93) நினைவு அஞ்சலியிலும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் சக போராளிகளையும் அன்புடன் அழைகின்றோம்.

சுதர்சன் வீதி,
புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

ம. பத்மநாதன் குடும்பம்.

(4996)

# மலையகத்தின் கல்விக்கு இந்தியா உதவ வேண்டும்

## அமைச்சர் தொண்டமான் வேண்டுகோள்

(கொழும்பு)

இந்திய வம்சாவளியினரான மலையகமாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு இந்தியா உதவ வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலை வரும் அமைச்சருமான தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார். இந்திய தூதுவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விருந்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரான மலையக மாணவர்களின் கல்வித்தரம் மோசமானதாக இருக்கின்றது. இந்த நிலையைப்போக்குவதற்கு இந்தியாவிலுள்ள கல்விமான்கள் இங்கு சேவையாற்ற வேண்டும் என்றும், இந்தியாவில் உயர்கல்வி பெற வாய்ப்புக்கள் அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## ஆய்வு வட்டம்

சமகால பொருளாதார நெருக்கடிகளை சீர் செய்யும் நோக்குடன் கிளிநொச்சியிலே ஆய்வு வட்டம் என்னும் பெயரிலே மாதாந்த அமர்வுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்தி வருகின்றது.

இந்த அமர்விலே துறைசார் நிபுணர்கள், விவசாயபீட விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து தீர்வுகளை ஆராய்கின்றனர்.

எதிர்வரும் ஆய்வுவட்ட அமர்விலே சமீபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆய்வுக்குள்ளாக்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளில் ஆண்டு 1இல்

## பிள்ளைகளைச் சேர்க்க புதிய திட்டம் வரும்

1994ஆம்ஆண்டு முதல் முதலாம் ஆண்டில்பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பது தொடர்பாக புதிய திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது. இப்புதிய திட்டம் தொடர்பான சுற்றறிக்கை அடுத்த மாதத்தில் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## பொருளியல் பயிற்சிநெறி

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு பொதுக்கலைமாணி பகுதி - I வர்த்தகமாணி பகுதி -I ஆகிய மாணவர்களுக்கு பொருளியல் வழிகாட்டற் பயிற்சிநெறி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

அடுத்தமாதம் 4ஆம திகதி நடைபெற இருக்கும் இவ்வழிகாட்டற் பயிற்சிநெறி முன்னர் நடைபெறாமல் தடைப்பட்ட பயிற்சி வகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## நிவாரணத்தில் சீனி இல்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான மே மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருள்களில் சீனி இடம்பெறவில்லை. செயலக புனர்வாழ்வுப்பகுதியினால் அனுப்பப்பட்டுள்ள விநியோகப் பட்டியலின் படி அரிசி, மாவு, பருப்பு, வெள்ளைப் பூடு, பால்மா ஆகிய பொருள்களே விநியோகிக்கப்படஉள்ளன. சீனி இம்முறையும் இடம்பெறவில்லை என்பதோடு கடந்த மார்ச், ஏப்ரல் மாத விநியோகங்களிலும், சீனி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## திருட்டு

(சுன்னாகம்)

வலி-வடக்கின் தெல்லிப்பழை, கட்டுவன் பகுதிகளிலிருந்து இராணுவ தாக்குதல்கள் காரணமாக இடம்பெயரும் மக்கள் குடியிருப்புக்களிலிருந்து பெறுமதியான தளபாடங்களும், வீட்டுபகரணங்களும் திருடப்பட்டு வருகின்றன. தெல்லிப்பழைப் பகுதியில் ஆனைக்குட்டி மதவடிப் பகுதியை அண்டியுள்ள வீடுகளில் இத்திருட்டுச் சம்பவங்கள் பெருவாரியாக நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட காவல்துறையினர் சிலரைக் கைது செய்துள்ளனர். (11)

## இளைஞர் கைது

(கொழும்பு)

சென்னையிலிருந்து கொழும்பு திரும்பிய இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில்போதைப் பொருள் தடுப்பு பணியகத்தை சேர்ந்தோரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தமது வயிற்றினுள் முப்பது இலட்சம் ரூபா பெறுமதியுடைய ஹேரோயின் போதைப் பொருளைக் கடத்தி வந்தார் எனவும், அதனால் தான் கைது செய்யப்பட்டார் எனவும் கூறப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு: | | வீரச் சாவு: |
|---|---|---|
| 27 — 05 — 1972 |  | 30 — 05 — 1992 |

### வீரவேங்கை வெற்றியரசன் (ஜெயந்தன்)

[கிருஷ்ணபிள்ளை நாகலிங்கம்(கிட்டிங்)]

ஓராண்டு முடிந்தாலும்
ஓராயிரம் ஆண்டு கழிந்தாலும்
எங்கள் இதயத்தில் — உமது
நினைவு என்றுமே அழியாது.


உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய். (4951)

ஐயா, அம்மா, தம்பிமார்
தங்கை.

# மாவீரனுக்கு ஒரு கடிதம்

## உயிரினுமினிய தோழன் பிரேமச்சந்திரனுக்கு



இன்று மே 30.

ஏனோ இன்று மற்ற நாட்களையும் விட அடிக்கடி உன் ஞாபகம் மனதில் வந்துபோகிறது. ஏன் இப்படி என்று என்னையே நான் கேட்டுக்கொண்டபோது விடை தெரிந்தது.

கடந்த ஆண்டு இதே நாளில்தான் அந்தப் பேரிடி வந்து எம்மைத் தாக்கியது. முல்லைத்தீவில் சிறிலங்காப் படையுடன் மோதி நீ வீரச்சாவடைந்துவிட்டாய் என்ற செய்திதான் அது. அதை இப்பொழுது நினைக்கும் போதும் இதயத்தில் வலி ஏற்படுவதை நன்றாக உணரமுடிகிறது.

நீ எம்மைப் பிரிந்துவிட்டாயா?

இல்லை... நிச்சயமாய் இல்லை...

ஏனென்றால் எப்போது நினைத்துக்கொண்டாலும் அப்போதெல்லாம் சிரித்தபடி நீ எம்மெதிரே நிற்பது போலத தெரிகிறது.

இதோ... இப்போது கூட...

உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டாத முகத்துடன் சுமாரான தோற்றம் கொண்ட பிறேமச்சந்திரன் என்ற இனிய போராளி என்னெதிரே வருகிறான்...

ஓ அதுதான் நீ-

உன்னை வேங்கையாக மாறவைத்த அந்தக் கட்டத்தை நினைத்துப் பார்க்கிறேன்...

திருமலை மண்ணில் நீ பிறந்தாய்- தமிழீழத்தில் சிங்கள

இந்தியப்படை எம்மண்ணைவிட்டு வெளியேறியது.

1990 யூன் மாதம் சிங்கள இராணுவத்துடன் மீண்டும் எமது போர் ஆரம்பமாகியது.

இதனைத்தொடர்ந்து திருமலையின்மூன்றாம் கட்டைப்பகுதியில் பல நாட்கள் தொடர்ச்சியாக உக்கிரமான போர்நடக்கிறது.. யுத்த சன்னனாய்க் களங்களில் நின்று நீ எதிரியோடு வெஞ்சமர் புரிந்தாய்.

1991 பெப்ரவரியில் யாழ்ப்பாணத்து மண் மீண்டும் உனது கால்களை ஸ்பரிக்கிறது. கட்டுவன் பகுதியில் காவலரண் பொறுப்பாளனாய் இருந்து சிங்களக் கூலிக்குச் சிமசொப்பனமாய் விளங்கினாய்.

திருமலை தந்த பெருவீரன் சீலனுடைய பெயர் தாங்கி 1991 இதே ஆண்டில் - வீறு கொண்ட வேங்கைகளின் சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு உருவாகியது. தலைமை தாங்கும் சக்தியும் திறமையும் ஆளுமையும் உன்னிடம் நிறையவே இருந்ததால் திருமலையில் இருந்து வந்த இப்பிரிவின் குழுவுக்கு நீயே தலைமைப் பொறுப்பை ஏற்கிறாய். இந்தப் பணியிலும் உனது சாதனைகள் எமது வரலாற்றில் பதிகின்றன.

ஓமந்தைக் காடுகளில் நடைபெற்ற வன்னிவிக்கிர-1 ஆனையிறவில் பலவேகய - 1 எல்லாவற்றிலும் உனது முத்திரையை பதித்துக்கொள்கிறாய்.

தமிழீழத்தில் எல்லைப்புறப் போர்களில் மிக முக்கிய தளமான மணலாறு பிரதேசத்தைக் கைப்பற்றும் எதிரியின் மின்னல் நடவடிக்கைகளில் தீரமுடன் நீ போரிட்டவேளையில் எங்கிருந்தோ பாய்ந்துவந்த எதிரியின் குண்டொன்று உனது தலையைத் துளைக்க நீ மயங்கிப் போகிறாய்...

அந்தக் காயத்தில் நீ உயிர் பிழைத்துக்கொண்டது எமது

ஏனோ இன்று மற்ற நாட்களையும் விட அடிக்கடி உன் ஞாபகம் மனதில் வந்துபோகிறது. ஏன் இப்படி என்று என்னையே நான் கேட்டுக்கொண்டபோது விடை தெரிந்தது.

கடந்த ஆண்டு இதே நாளில்தான் அந்தப் பேரிடி வந்து எம்மைத் தாக்கியது. முல்லைத்தீவில் சிறிலங்காப் படையுடன் மோதி நீ வீரச்சாவடைந்துவிட்டாய் என்ற செய்திதான் அது. அதை இப்பொழுது நினைக்கும் போதும் இதயத்தில் வலி ஏற்படுவதை நன்றாக உணரமுடிகிறது.

நீ எம்மைப் பிரிந்துவிட்டாயா?

இல்லை... நிச்சயமாய் இல்லை...

ஏனென்றால் எப்போது நினைத்துக்கொண்டாலும் அப்போதெல்லாம் சிரித்தபடி நீ எம்மெதிரே நிற்பது போலத் தெரிகிறது.

இதோ... இப்போது கூட...

உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டாத முகத்துடன் சுமாரான தோற்றம் கொண்ட பிறேமச்சந்திரன் என்ற இனிய போராளி என்னெதிரே வருகிறான்...

ஓ அதுதான் நீ-

உன்னை வேங்கையாக மாறவைத்த அந்தக் கட்டத்தை நினைத்துப் பார்க்கிறேன்...

திருமலை மண்ணில் நீ பிறந்தாய்- தமிழீழத்தில் சிங்கள இனவெறியாட்டங்களில் அதி உச்சக்கட்டக் கொடூரங்களை அனுபவித்ததும், இன்றும் அனுபவித்துக்கொண்டிருப்பதும் திருமலைப் பிரதேசம்.

தமிழ் மக்களின் உயிர்களுக்கோ, உடைமைகளுக்கோ உத்தரவாதமில்லை. பிரயாணங்கள் செய்வது என்பது எப்பொழுதுமே கேள்விக்குறி.

எந்த நேரம் மடத்தடியில் வெட்டு விழுமோ?

நாலாம் கட்டையில் சுடப்படுவோமோ?

எவ்விடத்தில் எப்போது காணாமல் போகிறோமோ?

என்ற ஏக்கங்களே தமிழ் மக்களின் வாழ்வானது. இவற்றுக்கு மத்தியில் நிலக்கவர்வு ஒரு பக்கம். தங்கள் நிலங்கள் சிங்களவருக்கு சொந்தமாக்கப்படுவதைக் கண்ணால் கண்டுகொண்டும் எதுவுமே செய்யவோ, சொல்லவோ, முடியாத நிலையில் தமிழ் மக்கள் துயருற்றுத் துவண்டு போவார்கள்....

15 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எல்லாம் பூசா முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

இந்த அவலங்களைக் கண்டு கொதிப்படைந்த இளைஞர்களில் நீயும் ஒருவனாகத் தாயக விடுதலையின் அவசியம் உணர்ந்து- விடுதலை வீரனாய் உனது வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டாய் - அது 86 ஆம் ஆண்டு.

பேராற்றில் நடந்த முதலாவது பயிற்சிக் களத்தில் உனது செயலாற்றும் திறமை இனங்காணப்பட்டது. அனைவருடைய மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவனாய் நீ மாறினாய்.

அதனால்தான் சந்தோசம் மாஸ்ரர் உட்பட திருமலை மாவட்டப் பொறுப்பாளர்கள் பலருக்கும் மெய்ப்பாதுகாவலனாக நியமிக்கப்பட்டாய்.

தோழா...

அந்தப் பொறுப்பாளர்களின் உயிர்கள் பலமுறை உன்னால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. அவர்கள் பங்குகொண்ட அத்தனை தாக்குதல்களிலும் நீயும் தோளோடு தோள் நின்றாய். இதனால்தான் மிகமிக நம்பிக்கைக்குரிய ஒரு புலிவீரனாக உன்னை நிலைநிறுத்திக்கொள்ளவும் உன்னால் முடிந்தது.

வடமராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷன், மில்லரின் கரும்புலித் தாக்குதல் - எல்லாவற்றிலும் களம் கண்டவன் நீ.

திருமலை மாவட்டத்தில், ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துடன் தொடர்புகொள்வதில் ஏற்படும் இன்னல்களையும், இடர்களையும் வார்த்தைகளிலோ எழுத்திலோ விபரிப்பது முடியாத காரியம்.

அருமை நண்பா...

உனது துணிச்சலையும், திறமையையும் இந்த இடத்தில் நினைவுபடுத்தாமல் இருக்க என்னால் முடியவில்லை.

ஆம் .. இராணுவத்தினரின் கண்களுக்குத் தப்பி, துரோகிகளின் பார்வையில் படாமல்,

இடர்மிகுந்த கரடுமுரடான காட்டுப்பாதைகளாலும், சேறும் சுரியும் நிறைந்த வயல்களினூடாகவும், கங்கைகள் பலவற்றைக் கடந்தும், குச்சவெளிப் பகுதியில் இருந்து மூதூர்ப் பகுதியை அடைவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும் அதுவும் பாரமான ஆயுதங்கள் பொருள்களுடன் ஆற்றைக்கடப்பது இலேசான காரியம் அல்ல. இந்தப் பிரயாணத்தின் அவஸ்தையை - பயங்கரத்தை-

(சி-6729)



# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

# மேஜர் பிறேமச்சந்திரன்

| வீரப்பிறப்பு : | வீரச்சாவு: |
|---|---|
| 16 - 07 - 1966 | 30 - 05 - 1992 |

உடல் வேதனையை ஒருதடவையல்ல பல தடவைகள் தொடர்ந்து அனுபவிப்பதென்றாலும் சிறிதுகூட முகம் சுளிக்காமல் செய்வதற்கு உன்னைப்போல ஒருவனால மட்டுமே முடியும், இப்படிப்பட்ட பிரயாணத்திலும் கூட, மற்றவர்களுக்கும் பாதுகாப்புக்கொடுத்து ஆயுதங்களையும் ஏந்தியபடி ஆற்றுநீரைக் கிழித்துக்கொண்டு மீன் குஞ்சுபோல நீ நீந்தி வருகின்ற அற்புதமான அழகான காட்சி இந்த நிமிடத்தில் கூட எனது மனக் கண்முன் தெரிகிறது. உனக்கே உரிய தனித்துவமான மனவுறுதிக்கு இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?

87 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் எங்கள் போர் ஆரம்பமாகிய பின் பெரும்பாலான களங்களில் உனது கால்கள் பதிந்தன. யாழ்ப்பாணத்தில், கோண்டாவிலில் இரண்டு இந்திய டாங்கிகளை அழித்து எமது வீரர்கள் இந்தியக் கூலிப்படைகளைத் திக்குமுக்காட வைத்த பெரும் தாக்குதலில் உனது வீரமும் சாதனை படைத்தது.

மீண்டும் உனது பாதங்கள் நீ பிறந்த மண்ணிலே தடம் பதித்தன 1988 ஜனவரியிலிருந்து மாவட்டத் தளபதியின் மெய்ப்பாதுகாவலனாய் மிகச் சிறந்த முறையில் உனது பணி ஆரம்பமாகியது.

1988 ஜனவரி 31.

திருமலையில் 5ஆம் கட்டைப் பகுதியில் இலுப்பைக்குளம் என்ற இடத்தில் இந்திய இராணுவத்திற்கும் எமது வீரர்களுக்குமிடையே உக்கிரமான மோதல் நடக்கிறது.

மிகவும் குறுகிய இடைவெளியில் நின்று கொண்டு நீ வீராவேசமாகப் போரிடுகிறாய்...

ஒரு பிறன் எல். எம். ஜியும் வேறும்பல ஆயுதங்களும் புலி வீரர்களால் கைப்பற்றப்படுகின்றன

சுதந்திர தாகம் கொண்ட ஒரு இனத்துக்கு முன்னால் அது சிறிய இனமாக இருந்தென்ன - ஏகாதிபத்திய ஆணவம் செல்லுபடியாகாது என்ற யதார்த்தம், தொடர்ந்துவந்த காலப் பகுதியில் நிரூபிக்கப்பட்டது.

தாய்.

1991 பெப்ரவரியில் யாழ்ப்பாணத்து மண் மீண்டும் உனது கால்களை ஸ்பரிக்கிறது. கட்டுவன் பகுதியில் காவலரண் பொறுப்பாளனாய் இருந்து சிங்களக் கூலிக்குச் சிமமசொப்பனமாய் விளங்கினாய்.

திருமலை தந்த பெருவீரன் சீலனுடைய பெயர் தாங்கி 1991 இதே ஆண்டில் - வீறு கொண்ட வேங்கைகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு உருவாகியது தலைமை தாங்கும் சக்தியும் திறமையும் ஆளுமையும் உன்னிடம் நிறையவே இருந்ததால் திருமலையில் இருந்து வந்த இப்பிரிவின் குழுவுக்கு நீயே தலைமைப் பொறுப்பை ஏற்கிறாய். இந்தப் பணியிலும் உனது சாதனைகள் எமது வரலாற்றில் பதிகின்றன.

ஓமந்தைக் காடுகளில் நடைபெற்ற வன்னிவிக்கிர-1 ஆனையிறவில் பலவேகய - 1 எல்லாவற்றிலும் உனது முத்திரையை பதித்துக்கொள்கிறாய்.

தமிழீழத்தில் எல்லைப்புறப் போர்களில் மிக முக்கிய தளமான மணலாறு பிரதேசத்தைக் கைப்பற்றும் எதிரியின் மின்னல் நடவடிக்கைகளில் தீரமுடன் நீ போரிடவேளையில் எங்கிருந்தோ பாய்ந்துவந்த எதிரியின் குண்டொன்று உனது தலையைத் துளைக்க நீ மயங்கிப் போகிறாய்...

அந்தக் காயத்தில் நீ உயிர் பிழைத்துக்கொண்டது எமது அதிர்ஷ்டம்

இந்த விழுப்புண் உன்னைச் சோர்வடையச் செய்ததா என்றால் அதுதான் இல்லை...

போர்க்களங்களில் வெற்றிவாகை ஆடும் உனதுசெயற்பாடுகள் தொடர்ந்தன.

மணலாற்றில் நடந்த ஒப்பரேஷன் சிக்சர் தாக்குதலில் வீரத்துடன் களமாடி ஒரு ஆர். சி. எல். உட்படப் பல ஆயுதங்களைக் கைப்பற்றிவிட்டு - மிக அமைதியாக எதையுமே செய்யாதவன் போல - அலட்டிக்கொள்ளாமல் நீ இருந்துவிட்டாய். நீதான் அவற்றைக் கைப்பற்றினாய் என்பதுகூட எமக்குத் தெரிய பல நாட்கள் சென்றன. உன்னுடைய சாதனைகளை நீ பறைசாற்றிக் கொள்ள மாட்டாய்... அதுவே உனது தனிப்பண்பு.

மக்களிடம் உனக்கிருந்த ஈடுபாடும் அலாதியானது உன்னைத் தனது மகனைப்போல நேசித்த ஒரு தமிழீழ அன்னை- ஒருநாள், உனது நிழற்படம் ஒன்று தரும்படி உன்னிடம் கேட்கிறார்

''பேப்பரிலை என்ரை படம் வரும்தானே? அப்ப வைச்சுப் பாருங்கோவன் '' என்று அந்த அன்னையிடம் சொன்னாய் ..

உயிரைவிட மேலான தாயக விடுதலைக்காக ஒரு புலி வீரன் எந்தக் களத்திலும் சாவை அணைத்துக்கொள்ள தயாராகவே வாழ்கிறான் என்ற உண்மையை உனது பதில் ஒரு சாட்சி

உன்னைப் படமாகப் பார்க்கும் துர்ப்பாக்கியத்தை அந்த அன்னைக்கும் எமக்கும் ஏற்படுத்திய அந்தக் கொடிய நாள் இறுதியில வரவே செய்தது.

30 - 05 - 92

சிறிலங்காவின் கூலிப்படைகள் முல்லைத்தீவிலிருந்து அலம்பிலை நோக்கி முன்னேற எத்தனிக்கின்றன. அதைத் தடுப்பதற்கான போரில நீ புயலாக எழுந்தாய்... எதிரியின் சதிகாரக் குண்டொன்று உன்னுடைய நெற்றியைத் துளைத்துப் பாய-

உனது தாய் மண்ணை முத்தமிட்டபடி நீ அமைதியாகிப் போனாய். தமிழீழப் பிரதேசத்தை அளந்து களமாடிய உனது கால்கள் ஓய்ந்து போயின ...

அடக்குமுறையாளர்களுக்கெதிராக உயர்த்திய உனது கரங்கள் உயர்ந்தபடியே இருக்க...

தோழனே... நீ மட்டும் ஏன் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்து போனாய்....

எங்கள் அன்னைபூமியைச்சூறையாடும் இனவெறியாளர்களுக்கு தீப்பிழம்புகளைக் கக்கிய உனது ஆயுதத்தை-

உனது பாதையைத் தொடரும் மற்றொரு புலி வீரனுடைய கைகள் இறுகப் பற்றிக்கொள்ளும் என்பது உனக்கு நிச்சயமாய்த் தெரிந்ததால்தான்-

உயிர்பிரிந்த பின்னரும் உனது முகத்தில் அதே அமைதி.. அதே புன்சிரிப்பு... அதே அடக்கம்...

இதோ... இப்போது கூட....

உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டாத முகத்துடன், சுமாரான தோற்றம் கொண்ட பிறேமச்சந்திரன் என்ற இனிய போராளி என் எதிரே வருகிறான்...

ஓ... அதுதான் நீ-

அன்புடன் உனது தோழன்

## சிந்தனைக்கு

குளத்தில் குதித்து மீனைப் பிடிக்க முயல்வதை விடவும், வீட்டிற்குச் சென்று வலையைப் பின்னுவ_ மேலானது.

- சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# சேவகப் புத்தியும் அடிமைத்தனமும்

இலங்கைத் தமிழர்கள் - குறிப்பாக பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் ஏகாதிபத்தியத்தினால் 'கீழ்ப் படிவுள்ள ஊழியர்கள்' எனப் பாராட்டப் பெற்றவர்கள். இதன் மூலம் அற்பசலுகைகள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள். சேவகப் புத்திக்காக கிடைக்கப் பெற்ற இவ் அற்ப சலுகைகள் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டவர்கள்.

இவ்வாறான விசுவாசமான சேவகம் / அடிமைத்தனம் பிரித்தானியருடன் மட்டும் நின்றுவிடவில்லை. இன்றும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் இதனைச் சிறப்பாகச் செய்கின்றன. இவர்கள் என்றும் சிங்களப் பேரினவாதத்தின் விசுவாசம் மிக்க அடிமைகளாக இருப்போம் என அவர்களிடம் மண்டி இடுகின்றார்கள்.

ஆனால், அன்றைய ஊழியத்திற்கும் இன்றைய அடிமைத்தனத்திற்கும் சில வேறுபாடுகளும் உண்டு. அன்று, தமிழர்கள் விசுவாசமான சேவகர்கள் எனப் பிரித்தானியக் குடியேற்ற வாதிகள் நம்பினார்கள். சேவையில் இணைத்துக் கொண்டார்கள். ஆனால், இன்று பௌத்த பேரினவாதம் விசுவாசம் மிக்க அடிமைகளாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத போதும், எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். எங்கள் விசுவாசத்தை நிரூபிக்கின்றோம் எனத்தமிழ்க்குழுக்கள் இரக்கின்றன.

இதன் உச்சக்கட்டமே, ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா டி. பி. விஜயதுங்காவிற்கு தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமையாகும். இவ் அறிவுறுத்தலில் ''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு உதவியது போலவே தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கும் உதவப் போவதாக'' தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவு செய்ய கொழும்பில் தமது காரியாலயத்தை திறக்க அனுமதியும் கோரப்பட்டுள்ளது.

அதாவது, கொழும்பிலுள்ள ஈ. பி. டி. பி. மற்

---

யாழ். இந்துமகளிர் கல்லூரி

## தேசியக் கல்லூரியாக தரமுயர்த்த உதவுவேன்

பணிப்பாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியை மிக விரைவில் தேசிய கல்லூரியாக மாற்ற என்னால் ஆன சகலஉதவிகளையும் நான் நல்க தயாராக இருக்கிறேன். இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம்தெரிவித்தார்.

நேற்று யாழ் இந்துமகளிர் கல்லூரியின் பொன் விழாவிற்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசிய கல்விப்பணிப்பாளர் மேலும் கூறுகையில், தான் கல்விப்பணிப்பாளராக கடமை ஏற்ற போது தேசிய பாடசாலையாக அங்கீகாரம் கேட்டு நான்கு பாடசாலைகள் விண்ணப்பித்ததாகவும் இதில் ஒன்றுக்கே இதுவரை அதற்கான அங்கீகாரம கிடைத்ததாகவும் தெரிவித்தார்,

மேலும் அவர் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் கல்வித் தரம் குறைந்துள்ளது என்பதை சில பத்திரிகைகள் சுட்டிக்காட்டியதாகவும், ஆனால் போராட்ட சூழ்நிலையில் இவ்வாறான கல்வித் தரம் குறைவது சாதாரண விடயம். ஆனால் நாம் தொடர்ந்து பல நெருக்கடிகளை முறியடித்து கல்வியிலே முன்னேறிக் கொண்டுள்ளோம். பாடசாலைகளில் வெண்கட்டி பற்றாக்குறை, கொப்பி தட்டுப்பாடு உள்ளது. நாம் மிகவும் கஷ்டங்களை சவால்களுக்கு மத்தியில் தான் இவற்றை உங்களுக்குபெற்று தருகிறோம். அது உங்களுக்கு போதாது என்பதை ஏற்று கொள்வதாகவும் தெரிவித்தார்.

யாழ் இந்து மகளிர்கல்லூரியில்தமிழீழதேசியக் கொடியை தமிழீழ கல்வி கழக பொறுப்பாளர் ஏற்றி வைத்ததுடன், பாடசாலை அதிபர் பாடசாலை கொடியை ஏற்றினார்.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் இளங்குமரன் உரையாற்றுகையில் எமது கல்விப் பணி தொடர்ந்து முன்னேற வேண்டும் என்றும் இது எமது விடுதலை போராட்டத்தில் கணிசமான பங்களிப்பை செய்யும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் இக்கல்லூரியின் பணி மென் மேலும் வளர வேண்டும் என்றும் கூறினார்.

## நிலக்கடலை இரவில் சூறையாடப்படுகின்றது

(தொல்புரம்)

மானிப்பாய், நவாலிப் பகுதி வயல்களில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை இரவில் திருடர்களினால் சூறையாடப் பட்டு வருகின்றன

யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் மீளளிப்புக் கடன் நிதி உதவியுடன் இப் பகுதிகளில் விவசாயிகள் நிலக்கடலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர். (41)

## விலைகளில் வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது தேங்காய் ஒன்று பத்து, பன்னிரண்டு ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது.

இதே வேளை குத்தரிசி மேலும் குறைந்துள்ளது. ஒரு கிலோ தற்சமயம் 25ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

முருங்கைக்காய் உட்பட சில மரக்கறி வகைகளிலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (24)

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி இந்து மயானம் இன்று பி ப 3.00 மணிக்கு சிரமதானப்பணி மூலம் செப்பனிடப் படவுள்ளது.

மயானத்தைப் புனிதமாக வைத்திருக்கும் நன்நோக்குடன் இப்பணி மேற்கொள்ளப்பட இருப்பதால் சகல இந்து மக்களையும் இச்சிரமதானப்பணியில்பங்குபற்றிச்சிறப்பிக்குமாறு இந்து மக்கள் சார்பாக திரு.சிபேரானந்தம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

---

# ஆய்வுகூட வசதி இருந்தும் செயன்முறைபயிற்சிஇல்லை

(மானிப்பாய்)

மானிப்பாயில் ஆய்வு கூட வசதி உள்ள கல்லூரி ஒன்றில் விஞ்ஞான செயன்முறைகள் எதுவுமே நீண்ட காலமாக நடைபெறவில்லை எனத் தெரிய வருகிறது. இக்கல்லூரிக்குத் திடீர் விஜயம் செய்த பரிசோதனைக் குழு ஆண்டு 6 முதல் மேல் வகுப்புகள் வரை விஞ்ஞான செயன் முறைகள் எதுவுமே நடைபெறவில்லை என்பதனைக் கண்டுபிடித்துள்ளது. மேலும் விவசாயப் பாடத்துக்குக் கூட அதிகம் பயன்படுத்தப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

இப்பாடசாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளும் ஆய்வுகூடத்தில் செயன்முறை எதுவும் நடைபெறவில்லை என்பது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மந்திகை வைத்தியசாலையில்

## மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(நெல்லியடி)

மந்திகைஅரசினர் வைத்திய சாலைக்கு வரும், வெளி நோயாளர்களினதும். கிளினிக் சிகிச்சை பெறுவோர்களுக்கான, முக்கிய மருந்து வகைகள். ஆஸ்பத்திரியில் இல்லாதமையினால், இதற்கான மருந்துகளை தனியார் டிஸ்பென்சரிகளிலேயே விலைக்குவாங்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு, பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை எமது நெல்லியடி செய்தியாளருக்கு தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தகவல் தருகையில்: அண்மையில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த குமண கப்பலில் ஒரு தொகுதி மருந்து வகை, மந்திகை வைத்தியசாலைக்கு கிடைக்குமென எதிர்பார்த்திருந்தும், விசர் நாய் தடுப்பு ஊசி மருந்து, கிருமி கொல்லி மருந்து, சேலைன் போன்றவையே வந்தடைந்ததாகவும், யசழ்ப்பாணத்திலுள்ள பல தனியார் டிஸ் பென் சரிகளுக்கே போதியளவு மருந்துவகைகள் குமண கப்பலில் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகள், தனியார் டிஸ் பென் சரிகளுக்கு, மருந்து வாங்க, வைத்திய சாலை துண்டைக் கொண்டு செல்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். (30)

## உதவிக்கு போனவரின் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வலிப்பினால் வீதியில் விழுந்து கிடந்தவருக்கு உதவச் சென்ற இளைஞரின் சைக்கிள் திருட்டுப் போனது. 24-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் யாழ் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் வலிப்பு ஏற்பட்டதனால் வீதியில் இளைஞர் ஒருவர் விழுந்து கிடந்தார். அவ்வழியால் சென்றவர்கள் அவருக்கு முதலுதவி அளிக்கையில் கன்னியர் மடத்தடியைச் சேர்ந்த ஏ ஜே. நாதன் என்ற இளைஞரும் தனது சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு உதவி புரிந்து கொண்டு நின்ற போதே அவரது 'ஏசியா' சைக்கிள் திருட்டுப்போனது. (22)

## வள்ளுவர் விழா ஏற்பாடுகள் தீவிரம்

வள்ளுவர் விழாவை எதிர் வரும் 11, 12, 13ஆம் திகதிகளில் உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தமிழீழ திருவள்ளுவர்மன்றம் மேற்கொண்டுள்ளது. இவ் விழாவை முன்னிட்டு இம் மன்றம் வட தமிழீழ பள்ளி மாணவர்களிடையே திருக்குறள் மனனம், கட்டுரை எழுதல் மற்றும் பேச்சுப்போட்டி என்பவற்றை நடத்தியிருந்தது தெரிந்ததே. இப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வள்ளுவர் விழாவின் இறுதி நாளன்றுவழங்கப்படவுள்ளது.

## பயிற்சி பெற களுத்துறை சென்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து 10பேர் களுத்துறையில் இயங்கும் தேசிய சுகாதாரக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக சென்றுள்ளனர்.

மேற்படி கல்வி நிறுவனத்திற்கு இங்கிருந்து செல்பவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கும் போதனா ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பயிற்சியை அங்கு 10 நாட்கள் பெறுவார்கள் என்றும் இவர்கள் இங்கு வந்ததும் இங்குள்ள ஆரம்ப சுகாதார பயிற்சி நிலையத்தில் வைத்து மற்றவர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் அங்கு ஆரம்ப சுகாதாரம் சம்பந்தமான பயிற்சியை பெறவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (சி) (நி)

## சிபார்சு

மத்திய மாகாண சபையில் எம். சதாசிவமும், ஊவா மாகாணசபையில் என். சச்சிதானந்தமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பில் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்றுஇ.தொ.கா.ஐ. தே.கட்சியிடம் சிபார்சு செய்துள்ளது

---

# ஜெயலலிதாவின் ஆட்சியில் அடிமைகளே அமைச்சர்கள்

## எல்லைக் காவற்படையை கர்நாடகம் அனுப்புக

வீரப்பனைப் பிடிக்கத் தேவையாம்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல் வீரப்பனையும், அவனது குழுவினரையும் கைது செய்வதற்கு

படையினர்மாநிலத்திற்குவந்த பின்பே அடுத்த கட்ட செயல் திட்டம் வகுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்டு. அன்று, தமிழர்கள் விசுவாசமான சேவகர்கள் எனப் பிரித்தானியக் குடியேற்ற வாதிகள் நம்பினார்கள். சேவையில் இணைத்துக் கொண்டார்கள். ஆனால், இன்று பௌத்த பேரினவாதம் விசுவாசம் மிக்க அடிமைகளாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத போதும், எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். எங்கள் விசுவாசத்தை நிரூபிக்கின்றோம் எனத்தமிழ்க்குழுக்கள் இரக்கின்றன.

இதன் உச்சக்கட்டமே, ஈ.பி.டி.பி. தலைவர் டக்கிளஸ் தேவானந்தா டி.பி. விஜயதுங்காவிற்கு தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமையாகும். இவ் அறிவுறுத்தலில் ''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு உதவியது போலவே தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிற்கும் உதவப் போவதாக'' தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவு செய்ய கொழும்பில் தமது காரியாலயத்தை திறக்க அனுமதியும் கோரப்பட்டுள்ளது.

அதாவது, கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களைய புதிய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா பாதுகாப்பு அமைச்சிற்கு உத்தரவிட்டுள்ள வேளையிலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. டி.பி. விஜயதுங்காவின் இவ் உத்தரவானது கொழும்பில் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் திரிவதினால் எழுந்துள்ள நெருக்கடியின் விளைவாக எழுந்ததா? அல்லது ஈ.பி.டி.பி. போன்ற தமிழ்க் குழுக்களின் விசுவாசத்தைப் பரிசோதனை செய்வதற்காகவா? எனத் திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும், ஈ.பி.டி.பி. தனது விசுவாசத்தனத்தை வெளிக்காட்டியுள்ளது.

ஒருகட்டத்தில் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்கிளஸ் தேவானந்தாவைத் தனது தம்பிகளில் ஒருவர் - மற்றவர் அஷ்ரப் - எனக் குறிப்பிட்டார். இவர்களும் அவரின் தனிப்பட்ட இராணுவமாக, சகோதரர்களாக வசதி வாய்ப்புக்களை அனுபவித்தே வந்தனர். ஆனால், இறுதிக் காலத்தில் அரசியல் நெருக்கடி வலுவடைந்தபோது அண்ணன், தம்பிகளைக் கைவிட வேண்டி ஏற்பட்டது. கொழும்பிலிருந்த தம்பிகளை மூட்டையாகக் கட்டி 24 மணி நேரத்திற்குள் திருமலைக்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் அண்ணன், தம்பிகளை மூட்டையாகக் கட்டி அனுப்பியமை தம்பிகளின் 'கீழ்ப்படிவின்மையோ' அன்றி 'விசுவாசமின்மையோ' காரணமல்ல. ஆனால், பின்பும் தம்பிகள் விசுவாசத்தைக் கைவிடவில்லை. அதாவது, நெருக்கடிக்குப் பயந்து சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்ட தம்பிகள் நெருக்கடி வந்தபோதும் தமது அடிமைத்தனத்தையும், சேவகப் புத்தியையும் கைவிடும் நிலையில் இருக்கவில்லை.

அன்று அரசியல் சூழ்நிலை நெருக்கடிக்கு உள்ளான போது பிரிட்டிஷ் பேரரசு தனக்கு நன்றி விசுவாசத்தோடு சேவகம் புரிந்தவர்களை நட்டாற்றில் கைவிட்டது. ஆனால், தமிழர்களால் அன்று அதை உணர முடியவில்லை. தமிழர்கள் அன்று ஏமாற்றப்பட்டார்கள். ஆனால், இன்று சிங்களப் பேரினவாதத்திற்கு அடிமைகளாகச் சேவகம் செய்ய முற்படும் தமிழ்க் குழுக்கள் இதைப் புரியாமல் இல்லை. சிங்களப் பேரினவாதம் தமிழ்இனத்திற்குச் செய்த துரோகத்தனம் நன்கு இவர்களுக்குத் தெரியும். இவர்கள் தமது குறுகிய லாபத்திற்காக இனத்தையே காட்டிக் கொடுக்கும் கோடரிக் காம்புகள்.

---

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது தேங்காய் ஒன்று பத்து, பன்னிரண்டு ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது.

இதே வேளை குத்தரிசி மேலும் குறைந்துள்ளது. ஒரு கிலோ தற்சமயம் 25ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

முருங்கைக்காய் உட்பட சில மரக்கறி வகைகளிலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.(24)

---

பி.ப 3.00 மணிக்கு சிரமதானப்பணி மூலம் செப்பனிடப் படவுள்ளது.

மயானத்தைப் புனிதமாக வைத்திருக்கும் நன்நோக்குடன் இப்பணி மேற்கொள்ளப்பட இருப்பதால் சகல இந்து மக்களையும் இச்சிரமதானப்பணியில்பங்குபற்றிச்சிறப்பிக்குமாறு இந்து மக்கள் சார்பாக திரு.சிபேரானந்தம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

---

வலிப்பு ஏற்பட்டதனால் வீதியில் இளைஞர் ஒருவர் விழுந்து கிடந்தார். அவ்வழியால் சென்றவர்கள் அவருக்கு முதலுதவி அளிக்கையில் கன்னியர் மடத்தடியைச் சேர்ந்த ஏ ஜே. நாதன் என்ற இளைஞரும் தனது சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு உதவி புரிந்து கொண்டு நின்ற போதே அவரது 'ஏசியா' சைக்கிள் திருட்டுப்போனது. (22)

---

வள்ளுவர்மன்றம் மேற்கொண்டுள்ளது. இவ் விழாவை முன்னிட்டு இம் மன்றம் வட தமிழீழ பள்ளி மாணவர்களிடையே திருக்குறள் மனனம், கட்டுரை எழுதல் மற்றும் பேச்சுப்போட்டி என்பவற்றை நடத்தியிருந்தது தெரிந்ததே. இப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வள்ளுவர் விழாவின் இறுதி நாளன்றுவழங்கப்படவுள்ளது.

---

டத்தக்கது (சி) (நி)

### சிபார்சு

மத்திய மாகாண சபையில் எம். சதாசிவமும், ஊவா மாகாணசபையில் என். சச்சிதானந்தமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பில் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்றுஇ.தொ.கா.ஐ. தே.கட்சியிடம் சிபார்சு செய்துள்ளது

---

# ஜெயலலிதாவின் ஆட்சியில் அடிமைகளே அமைச்சர்கள்

### - பண்ருட்டி இராமச்சந்திரன்

(சென்னை)

முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் அமைச்சரவையில்இருந்தது மரியாதைக்குரிய ஒன்றாக இருந்தது. ஆனால் ஜெயலலிதா கட்சியில் மரியாதைக்குரியவர்கள் எவருமே இருக்க முடியாது. அவரது கட்சியில் அடிமைகள்தான் இருக்க முடியும் என முன்னாள் அமைச்சரும் பாட்டாளி மக்கள் கட்சியின் எம்.எல்.ஏ. யுமான பண்ருட்டி இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் அ.தி.மு.கவில் தான் சேரப் போவதாக வதந்தியைக் கிளப்பியது யார் என்று தெரியவில்லை. அதில் துளியளவு கூட உண்மையில்லை. அமைச்சராக வேண்டும் என்ற விருப்பமும் தனக்கு அறவே கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீரப்பனைதேடும்படையினர் மக்கள்மீது வன்முறை

### டாக்டர் ராம்தாஸ் குற்றச்சாட்டு

[சென்னை]

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கோஷ்டியைத்தேடும் வேலையில் ஈடுபட்டுள்ள கர்நாடக - தமிழ்நாடு அதிரடிப் படையினர் மேட்டூர் பகுதியிலுள்ள கிராம மக்களைத் துன்புறுத்தி வருவதாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அப்பகுதியிலுள்ள மக்கள் வீரப்பன் கும்பலைப் பிடிப்பதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளதாக அவர் நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

## அ.தி.மு.க-புலிகள் ஒப்பந்தம் டில்லியில் ஏற்பட்டதாம்

### சுப்பிரமணியம்சுவாமி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்குமிடையேபுதுடில்லியில் சமீபத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

அப்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் தமிழ்நாட்டிலிருந்து விடுதலைப்புலிகள் தப்பிச்செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று சுப்பிரமணியம் சுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

### ராவ் பாராட்டு

(சென்னை)

பாகிஸ்தானில் பதவிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள பிரதமர் நவாப்செரீப் பிற்கு இந்திய பிரதமர் பி வி. நரசிம்மராவ் பாராட்டுச் செய்தி ஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

இப்பாராட்டுச் செய்தியில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய பிரதமர் இருநாடுகளின் ஒத்துழைப்புக்கும் நட்புறவுக்கும் உறுதுணையாக இருப்பார் என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து

## வெல்டிங் குச்சிகள் யாழ். கடத்தலாம்

இராமேஸ்வரத்திலிருந்து கடத்தல் படகுமூலம் வெல்டிங் குச்சிகள் விடுதலைப்புலிகளுக்காகக் கடத்திச்செல்லப்படுகின்றன என்றும், இவற்றை விடுதலைப்புலிகள் அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது எரிபொருள் கடத்தல் குறைந்துவிட்ட நிலையில் கடத்தல்காரர்களின் பட்டியலில் வெல்டிங் குச்சிகள் புதிதாகச் சேர்ந்துள்ளன என்றும் உலோக சாதனங்களைப் பற்ற வைக்கும் வெல்டிங் குச்சிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணப் பகுதியில் இவற்றுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது என பத்திரிகை செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி வெரித்ாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூர் பட்டடைகளுக்குத் தேவைப்படுவதாகக் கூறி வெல்டிங் குச்சிகளை வாங்கி வந்து கடத்தல் படகுகளில் ஏற்றி அனுப்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. சபையில்

## எரித்திரியாவுக்கு இடம் பாதுகாப்புசபைஅங்கீகாரம்

எரித்திரியாவையும், மொனாகோவையும், ஐக்கிய நாடுகள் சபையில் முழு அந்தஸ்துடைய உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளலாம் என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

இந்த இரு நாடுகளும் சேருவதை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை 183 ஆக உயர்ந்துள்ளது. இந்தியா, சீனா, கனடா பிரான்ஸ், அமெரிக்கா, எத்தியோப்பியா உட்பட பல நாடுகளும் எரித்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்லைக் காவற்படையை கர்நாடகம் அனுப்புக

### வீரப்பனைப் பிடிக்கத் தேவையாம்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல் வீரப்பனையும், அவனது குழுவினரையும் கைது செய்வதற்கு உதவும்படி கர்நாடக மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி மத்திய அரசுக்கு இது தொடர்பாக எழுதியுள்ள கடிதம் ஒன்றில் எல்லைப்பாதுகாப்புப் படையின் உதவி தேவைப்படுவதாகவும், அப்படையினர்மாநிலத்திற்குவந்த பின்பே அடுத்த கட்ட செயல் திட்டம் வகுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழக - கர்நாடக பொலிசார் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெறும் எனவும், சிறப்பு அதிரடிப் பொலிசில் மேலும் தொண்ணூறு பொலிசார் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 குழந்தைகள் உட்பட

## சென்னையில் இல. தமிழர் 39பேர் பொலிஸாரால் கைது

சென்னையில் கோடம்பாக்கம், விருகம்பாக்கம் பகுதிகளில் உரிய ஆவணங்களின்றி தங்கியிருந்த 3 குழந்தைகள் உட்பட 39 இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்

மாலை 4 மணி முதல் இரவு 9 மணிவரை இப்பகுதியில் நடைபெற்ற திடீர் தேடுதலில் இவர்கள் கைதாகினர் விசாரணைக்காக இவர்கள் கியூபிரிவு புலனாய்வு துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு தமிழக நிலைமைகள் சீர்கேடு

### தங்கபாலு தெரிவிப்பு

(சென்னை)

சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் தப்பிச் செல்லும் சம்பவங்களால் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் சீர்கெட்டிருப்பதாக இந்திய மத்திய அரசின் இணைஅமைச்சர் கே. வி. தங்கபாலு திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், இதனால் தமிழகத்தின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், அதனால் தமிழக அரசு பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## பிரிட்டன் நிதி அமைச்சர் பிரதமரால் பதவி நீக்கம்

பிரிட்டனின் அமைச்சரவையில் முக்கிய பெரிய மாற்றங்களைப் பிரதமர் ஜோன் மேயர் செய்துள்ளார்.

நிதித்துறை அமைச்சர் றொமேன் லெமான் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, தற்போதைய உள்நாட்டு அமைச்சரான டேவிட் பிறோ நிதித்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டு அமைச்சர் பதவி சுற்றுச் சூழல் அமைச்சராக இருந்த மைக்கல் ஹேறவார்ட்டிடம் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்துறை அமைச்சர் ஜோன் ஜமால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஈழநாதம்

# இந்திய இராணுவத்தை ஜெயலலிதா அவமதிப்பு

## தண்டாயுதபாணி குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப்படையை முதலமைச்சர் ஜெயலலிதா அண்மையில் விமர்சித்து அறிக்கை விட்டிருப்பது இந்திய இராணுவ செய்கைகளையும், திறமையையும் குறைத்து கூறுவதாக அமைந்துள்ளது என தமிழக காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் தண்டாயுதபாணி குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர், அகில இந்திய சபாநாயகர்ம் மாநாட்டை அடுத்தமாதக சென்னையில் நடத்த தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவிற்கு தகுதியில்லை என்றும் கூறினார்.

### ஜெயலலிதா கோரிக்கை

[சென்னை]

தமிழ்நாட்டிலிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை உடன் திருப்பி அனுப்ப வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்தியஅரசைக் கோரியுள்ளார்.

### ராமநாதபுர மாவட்டம்

## கரையோர பாதுகாப்பிற்கு சிறப்பு அதிரடிப்படை

(தமிழ்நாடு)

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோர பாதுகாப்பிற்கு சிறப்பு அதிரடிப்படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிரடிப்படையினருக்கு பல நவீன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றனஎனவும், இவர்கள் தற்போது கரையோர பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியிலுள்ளனர் எனவும்,

ஏற்கனவே மேற்படிபகுதிகளில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய 45 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தமிழ் நாடு காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இந்தியாமீதான நடவடிக்கை அமெரிக்கா ஒத்திவைப்பு

(டில்லி)

அமெரிக்காவின் பேற்றன்ற் உரிமைகளைப் பாதுகாப்பதில் புதுடில்லி தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டிஅமெரிக்க வர்த்தகச் சட்டம் 301-ன் கீழ் இந்தியாவின் மீது கடும் நடவடிக்கை எடுப்பதை கிளிங்டன் நிர்வாகம் ஒத்தி வைத்துள்ளது.

வாஷிங்டனில் இதனை அறிவித்த அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி நிக்கி கான்டல் மேலும் கூறுகையில், இந்தியாவின் வர்த்தக நடவடிக்கைகளை ஆராய ஒரு குழு நியமிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

### பொஸ்னியாவில்

## ஏர்லைன்ஸ் விமானங்களை பயன்படுத்த நேட்டோ முடிவு

(பிரசெல்ஸ்)

பொஸ்னியாவில்முஸ்லிம்கள் வாழும் பகுதிகளைப்பாதுகாப்பதில ஏர்லைன்ஸ் போர் விமானங்களையும் பயன் படுத்த [illegible] நர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். அத்துடன் முன்னாள் யூகோஸ்லாவிய மீதான கடற்படை முற்றுகையை மேலும் தீவிரமாக்க [illegible]

## வீரவணக்கக் கூட்டம்

5ஆம் மாதங்களில் (மே மாதம்) வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வடமராட்சிக் கோட்டத்தின் கரவெட்டி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8-00 மணிக்கு கரணவாய் கிழக்கு உச்சில் அம்மன் கோவிலடியில் நடைபெறும்.

செல்வி சுகுணா, திரு. தங்கன், திரு. கலையரசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தும் இவ்வீரவணக்கக் கூட்ட முடிவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (90). [யோ]

## ஓய்வூதிய வவுச்சர் சில தினங்களில் கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களது மே, யூன் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் இன்னும சில நாட்களில் வரவுள்ளதாக தெரியவருகின்றது.

இதில் மே மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் கொழும்புதுறைமுகத்தில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்த குமாரி கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாக முன்னர் செய்தி வெளிவந்தது தெரிந்ததே. இதேவேளை காலநிலை காரணமாக பொருள்கள் ஏற்றப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தை அடுத்து குறிப்பிட்ட திகதிக்கு குமாரி கப்பல் வர முடியாமல் போனது தெரிந்தத.

தற்சமயம் பொருள்கள் ஏற்றி முடிந்த நிலையில் இக்கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டு இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும் என தெரியவருகின்றது இதில் மேற்படி இரண்டு மாதங்களுக்கும் உரிய வவுச்சர்களும் வருமென தெரிவிக்கப்பட்டது. [சி]

## இந்தியா இறக்குமதியை அதிகரிக்க வேண்டும்

(கொழும்பு)

-தொண்டமான்

இந்தியா கூடுதலான பொருள்களை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்து அதிகமான இந்தியர் இலங்கைக்கு வரவும் அனுமதிக்கவேண்டும் என அமைச்சர்தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஒபரோய் ஹோட்டலில் இந்திய தூதுவருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசார வைபவத்தில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய இந்திய தூதுவர் நரேஷ்வர்தயாள் இந்திய-இலங்கை உறவு உறுதியான அத்திவாரத்தில் உள்ளது இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர் என்று கூறினார்.

## போரூட் பிரதிநிதியாக சுவீடன் நாட்டவர்

(வடமராட்சி)

சிறிலங்காவில் போரூட் நிறுவனத்தில் தனது சேவையை நிறைவு செய்து கொண்ட கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹன்றிகீலன் நோர்வே செல்லவுள்ளார்.

1991 ஆம் ஆண்டு தனது சேவையை ஆற்ற ஆரம்பித்த இவர் மூன்று வருட சேவையை முடித்துள்ளார். இவரது இடத்திற்கு சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு யாழ்ப்பாணத்தில் போரூட் உத்தியோகத்தர்களால் பிரியாவிடை வைப[illegible]

அதே சமயம் யாழ். மாவட்டத்தில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் அண்மையில் யாழ் வந்திருந்த போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஹரோல்ட் நாளை திட்கட்கிழமை கொழும்பு பயணமாகிறார். (யோ)

வெளிவந்து விட்டது

### மெய்வல்லுநர் போட்டி

யாழ் கோட்டப்பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி திங்கடகிழமை பிப 1-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். அன்று யாழ். கோட்ட பாடசாலைகள் அனைத்தும் 1 மணிக்கு மூடப்படும். அலுவலர்கள், கொத்தணி அதிபர்கள், அதிபர்கள், மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கேட்டுக்கொள்கின்றார்.

### மாகாண

மாகாணமும் பல நடைமுறைச்சிக்கல்கள் உள்ளன. மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்கும் விடயத்தில்கூட மாகாண அரசுகளுக்கு பூரண அதிகாரம் இல்லை. இவ் அதிகாரங்களை பாராளு[illegible]

# இந்தியா-காஷ்மீர் இணைவு மறுபரிசீலனை இல்லை

## இந்திய வெளியுறவு அமைச்சர் வற்புறுத்து

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் வெளியார் யாரும் தலையிட, சமரஸ முயற்சியில் ஈடுபட அனுமதிக்கமுடியாது என்றும், இந்தியா - காஷ்மீர் - பாகிஸ்தான் மக்களிடையே முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டிய அவசியம்இல்லை என்றும் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் வீடியோ சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்துவிட்டது குறித்து மறுபரிசீலனை செய்வது என்ற பேச்சிற்கு இடமில்லை. காஷ்மீர் பிரச்சினை குறித்து நாட்டின் சட்டவரம்பிற்குள்ளேயே பேச்சு நடத்தமுடியும் என்றும் அவர் கூறினார்.

ஜம்மு-காஷ்மீரில் பெரியளவில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் குர்ஷித் தெரிவித்தார்.

## ஜேர்மன் அகதிகள் மீது மீண்டும் தாக்குதல்

(பெர்லின்)

ஜேர்மனியில் மீண்டும் வெளிநாட்டு அகதிகள் மீது தீவிர வலதுசாரி அமைப்புகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளன. சொல்ஜன் நகரில் நேற்று மூன்று துருக்கிய பெண்களும் இரு சிறுவர்களும் அவர்களது வீட்டுடன் எரித்துக் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று குழந்தைகள் எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

மியூனிச் ஹனூவர், பெர்லின் ஆகிய நகர்களில், அகதிகளாக வந்த வெளிநாட்டவர் மீதும் தாக்குதல் நடந்துள்ளன. ஜேர்மனியினுள் நுழையும் அகதிகளைத் தடுக்கும் சட்டத்தை ஜேர்மன் பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றியிருந்தது.

இதேசமயம் நேற்று 2000 துருக்கியர்கள் நேற்று பெர்ளினில் தமக்கு எதிராக நடக்கும் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். துருக்கியர்கள் கொல்லப்பட்ட இடத்திற்கு நேற்று ஜேர்மனியின் உள்துறை அமைச்சர் நேரில்சென்று பார்த்தார். துருக்கி வெளிநாட்டவர்களுக்கு ஜேர்மனி தகுந்த பாதுகாப்பு அளிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளது.

### பிரேமதாசாவை

எடுக்கும் தைரியம் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை எதிர்க்கட்சிகள் பலவீனமான நிலையில் இருந்தபோதும் மக்கள் அவர்களுக்காக வாக்களித்துள்ளனர். இந் நிலையில் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக முழுச்சக்தியையும் பயன்படுத்தாவிட்டால் அவர்களும் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு துணை போனவர்களாகவே கருதப்படுவர்.

### மாற்றம் வெளி வந்தது

மாற்றம் சஞ்சிகையின் சித்திரை-ஆனி இதழ் வெளிவந்துள்ளது. தனிமனித சுதந்திரம், சங்கதமிழ்ப்பெண்கள். மற்றும் மானிப்பாயில் சில மணிகள் எனும் நேரடிறிப்போட் நாட்டுப்பற்று எனும் குட்டிக்கதை, தியாகம், சிறுகதை போன்ற ஆக்கங்கள் வெளிவந்துள்ளன

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 28-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9591

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1721, 26-2827, 24-9549, 27-7750, 28 0587,
26-6526, 24-2680, 24 7628, 22-8855, 24-3364,
26-2585, 40-2394, 41 9995, 40-7207, 42-2151,
[illegible]

## அமெரிக்கா ஒத்திவைப்பு

(டில்லி)

அமெரிக்காவின் பேற்றன்ற் உரிமைகளைப் பாதுகாப்பதில் புதுடில்லி தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி அமெரிக்க வர்த்தகச் சட்டம் 301-ன் கீழ் இந்தியாவின் மீது கடும் நடவடிக்கை எடுப்பதை கிளிங்டன் நிர்வாகம் ஒத்தி வைத்துள்ளது.

வாஷிங்டனில் இதனை அறிவித்த அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி நிக்கி கான்டல் மேலும் கூறுகையில், இந்தியாவின் வர்த்தக நடவடிக்கைகளை ஆராய ஒரு குழு நியமிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பொஸ்னியாவில்

## ஏர்லைன்ஸ் விமானங்களை பயன்படுத்த நேட்டோ முடிவு

(பிரசெல்ஸ்)

பொஸ்னியாவில்முஸ்லிம்கள் வாழும் பகுதிகளைப்பாதுகாப்பதில ஏர்லைன்ஸ் போர் விமானங்களையும் பயன் படுத்தலாம் என்று பிரான்சில் கூடிய நேட்டோ நாடுகள் முடிவு செய்துள்ளன. மேலும் இதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறு இராணுவத் திட்டமிடுநர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். அத்துடன் முன்னாள் யூகோஸ்லாவிய மீதான கடற்படை முற்றுகையை மேலும் தீவிரமாக்க வேண்டுமென நேட்டோ நாடுகள் ஒப்புக்கொண்டிருப்பதாக நேட்டோ அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

துபசார வைபவத்தில் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு கொண்டுள்ளனர் என்று கூறினார்.

## போரூட் பிரதிநிதியாக சுவீடன் நாட்டவர்

(வடமராட்சி)

சிறிலங்காவில் போரூட் நிறுவனத்தில் தனது சேவையை நிறைவு செய்து கொண்ட கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹன் றிகீலன் நோர்வே செல்லவுள்ளார்.

1991 ஆம் ஆண்டு தனது சேவையை ஆற்ற ஆரம்பித்த இவர் மூன்று வருட சேவையை முடித்துள்ளார். இவரது இடத்திற்கு சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு யாழ்ப்பாணத்தில் போரூட் உத்தியோகத்தர்களால் பிரியாவிடை வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதையடுத்து இவர் 8 ஆம் திகதி யாழ். வருகைதரவுள்ளார்.

அதே சமயம் யாழ். மாவட்டத்தில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் அண்மையில் யாழ் வந்திருந்த போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஹரோல்ட் நாளை திட்கட்கிழமை கொழும்பு பயணமாகிறார். (யோ)

இனப்பிரச்சினை

தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் ஒரு உடன்பாடு காணப்பட்டு இருந்ததாகவும், அதனாலேயே பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக தமது கட்சி ஆலோசனை எதையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் எனினும் முன்னாள் ஜனாதிபதி இல்லாத நிலையில் அந்த திட்டம் பற்றி பகிரங்கமாக தெரிவித்து சர்ச்சையை உருவாக்க விரும்பவில்லை எனவும், இருந்தும் தமது கட்சி பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க ஆலோசித்திருக்கிறது எனவும் தெரிவித்தார்.

ஹெலி

டது. இதேவேளை வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு பகலாக சிறிலங்கா கடற்படையின் விசைப்படகு ரோந்துச்சேவையும் அதிகரித்திருந்தது. (யோ)

ரணிலின்

அவரது குடும்ப வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது. 44 வயதான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்னமும் திருமணம் ஆகாதவர் என்பது குறிப்பிடத் தக்கது.

பாடசாலை

கண்டுபிடித்து அதை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம இந்த முதுகு நோய் பாரமான பாடசாலை பைகளைச் சுமப்பதால் ஏற்படுகின்றது எனக் கூறமுடியாது, பாடசாலைப் பைகளை முதுகில் சுமக்காத மேலை நாட்டு மாணவர்களிடையேயும் இந்த நோய் காணப்படுகிறது என்று சில வைத்திய நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

யாழ் கோட்டப்பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி திங்கட்கிழமை பி ப 1-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். அன்று யாழ். கோட்ட பாடசாலைகள் அனைத்தும் 1 மணிக்கு மூடப்படும். அலுவலர்கள், கொத்தணி அதிபர்கள், அதிபர்கள், மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கேட்டுக்கொள்கின்றார்.

மாகாண

மும் பல நடைமுறைச்சிக்கல்கள் உள்ளன. மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்கும் விடயத்தில்கூட மாகாண அரசுகளுக்கு பூரண அதிகாரம் இல்லை. இவ் அதிகாரங்களை பாராளுமன்றம் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. நிதி ஒதுக்கீட்டை கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு வேண்டிய அதிகாரங்களைப் பாராளுமன்றம் மேற் கொண்டிருக்கிறது.

கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக முழுச்சக்தியையும் பயன்படுத்தாவிட்டால் அவர்களும் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு துணை போனவர்களாகவே கருதப்படுவர்.

மற்றும் மானிப்பாயில் சில மணிகள் எனும் நேரடிறிப் போட் நாட்டுப்பற்று எனும் குட்டிக்கதை, தியாகம், சிறுகதை போன்ற ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் வல்லிபுரம்

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் வல்லிபுரம் 29-5-93இல் ஏழாலையில் காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, பகவதி, புனிதவதி, நிர்மலாதேவி, ஆனந்தவடிவேல் (மனேச்சர் சில்லா வாச் வேக்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்லத்துரை, கிருஷ்ணபிள்ளை, செபஸ்தியன் (ரத்தினம்) உரிமையாளர் சில்லா வாச் வேக்ஸ் யாழ்ப்பாணம்.) சிவலிங்கம் (தனுயா நகை மாடம் யாழ்ப்பாணம்), தயாலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமச் சடங்கு இன்று மதியம் 2-00 மணிக்கு ஏழாலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

வ. ஆனந்தவடிவேல் (மகன்)
சில்லா வாச் வேக்ஸ்

[5000]

### திரு. வி. பெ. செல்லத்துரை

(இளைப்பாறிய அதிபர்)

உசனைச்சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு வி.பெ. செல்லத்துரை அவர்கள் 29-05-93 காலை 8-30 மணியளவில் சிவபதமடைந்து விட்டார். இவர் செல்லம்மாவின் அன்பு கணவரும், திருமதி முத்துப்பிள்ளை பெரியதம்பியின் மூத்த புதல்வனும், சிவாஜினி [u.k]. ஜீவகன் [u k), Dr அசோகன் [யாழ். போதனா வைத்தியசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், Dr ஜெயநாதன் [u k], சாரதா [u.k] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயசங்கர், சரவணன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-05-93 இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு அன்னாரின் ''திருவதிகை'' இலலத்தில்நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ. அசோகன் (மகன்)

''திருவதிகை''
உசன்,
மிருசுவில். (5001)

வெளிவந்து விட்டது

**மாற்றம்**

சஞ்சிகை: 03

[5002]

யாழ்நகர்

**ஸ்ரீதர் திரையரங்கில்**

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

இரண்டாவது வெற்றிப் படைப்பு

**"இது எங்கள் தேசம்"**

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10. 30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6688]

சாவகச்சேரி

**தெய்வேந்திரா திரை அரங்கில்**

1-6-1993 செவ்வாய்க்கிழமை முதல்
முல்லை மாவட்டக் கலைஞர்களின்

**முதலாவதுவெற்றிப்படைப்பு**

**"தமிழோசை"**

தினசரி மாலை 4 மணி 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

(சி/6720)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 28-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9591

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1721, 26-2827, 24-9549, 27-7750, 28 0587, 26-6526, 24-2680, 24 7628, 22-8855, 24-3364, 26-2585, 40-2394, 41 9995, 40-7207, 42-2151, 41-9855, 24-2024, 28-2156, 26 0355, 26-8223.

### 29-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9596

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-0878, 26-3528, 27-2020, 42-2364, 40-1617, 41-8035, 40-7299. 27-9649, 27-7711.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0423, 26-1427, 24-9390, 28-9677, 41-9327, 26-2291, 27-6583.

வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக

**விருதலைப் புலிகள்**
மாணவரமைப்பினால் நடாத்தப்படும்

**கலை விழா**

இடம்: யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி)
நேரம்: இரவு 7-00 மணி (இன்று)
காலம்: 30-5-93 (ஞாயிற்றுக்கிழமை)

நிகழ்ச்சிகள்:

1, நாடகம் **இருகை ஓசை**
2. நாட்டிய நாடகம்
**மனிதநேயம் மலர்கிறது**
3. அபிநயம் **புரட்சிப் பாடல்கள்**

★ **இசைகானங்கள்** ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**அன்பளிப்பு: 10/- 15/-**

அன்பளிப்பு **சயன்ஸ் ஹோல்**

(சி/6721)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ஆம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.